Tamil Heritage Foundation International Digital Library EBook collection

உ நாடார் குல மித்திரன்.

1927 ௵ டிசம்பர் ௴ 5 உ

## எம். கலியாணசுந்தர முதலியாரின் தெளிவு.

இவர் 1927-ம் வருடம், அக்டோபர் மாதம் 22-ந் தேதியில் "தமிழ் நாடு" என்னும் பத்திரிகையில் "சில தமிழ் மொழிகளின் திரிபும், பொருளும்" என்னுந் தலைபங்க மிட்டு ஒரு வியாசம் எழுதியுள்ளார். அவ்வியாசம் இவரை மிஸ் மேயோ என்பவளைப் பார்க்கிலும் ஆராய்ச்சியில் உயர்ந்தவர் எனக் காட்டி விட்டது. இவ்வளவு ஆராய்ச்சிக்காரர் நம் நாட்டிலேயே பிறந்து வளர்ந்து இருக்க, நம் நாட்டின் தன்மையை ஒரு சிறிதும் அறியாத அயல் நாட்டாள் கூறியதற்காக நாம் கவலைப்படுதல் அறியாமை யென்க.

(1) இவர் "சாட்சி சொல்லப் பார்ப்பது கீழிருந்தும், மேலிருந்துமாகும். அதனால் அவர்கள் சாட்சி என்னும் பெயரைப் பெறுவர்" என்கிறார்.

கீழிருந்தும் மேலிருந்தும் பார்த்து சாட்சி சொல்பவனைத் தான் சாட்சி எனக் கூறமுடியுமே யன்றி, பார்த்தும் சாட்சி சொல்லாதவனையும் சாட்சி எனக் கூற முடியாது. அப்படி நியாய ஸ்தலத்தில் சாட்சி சொல்பவனையும் சாட்சி என்னும் பெயரை வைத்தே என்றும் அவனது ஆயுசு பரியந்தம் கூப்பிடவும் முடியாது. அதுவும் அவனுக்கு சாதிப் பெயராக வைத்தும் அழைத்தல் வழக்கின்று. தென்னை, பனை மரத்தி லேறிப்பார்த்து சாட்சி சொன்னவனைத்தான் சாட்சி எனக் கூறுவதோ? மெத்தை மீதும், புளிய மரத்தின் மீதும் ஏறிப் பார்த்து சாட்சி சொல்லுபவனை, சாட்சி என்னும் வார்த்தை தொடராதோ? என்னே! இவரது அறிவின் தெளிவு. சாட்சி என்பது ஒரு கேஸ் துவக்கி, அது முடியும் பரியந்தம் அக் கேஸுக்கு சாட்சி சொல்பவனைக் கூப்பிடுதல் வழக்கு. அக் கேஸ் முடிந்த பிறகும் அவனை சாட்சி எனக் கூப்பிடுதல் எங்கிலும் வழக்கின்று. ஆகவே நிரந்தர சாட்சி, சாட்சி சொல்பவனுகான்.

(2) இவர் "எல்லாவற்றையும் மேலே யிருப்பவன் அறிவான். மேலிருப்போர் மர மேறியும், சூரியனும், சூரியனைப் போன்ற விளக்க அறிவினையுடைய அறிஞரும் ஆக மூவராகும்" என்கிறார்.

எல்லாவற்றையும் அறிதல் மேலிருப்போரெனக் கூறிய இவர், அம்மேலிருப்போராகிய சூரியனோடும், மர மேறியோடும், கீழிருப்போராகிய அறிஞரை ஒன்றுபடப் பிணைத்தல் அறியாமை யென்க. இவர் தெரிவித்தவாறு சூரியனும், அறிஞனும் சாட்சி சொன்னமையால் தான் சாட்சி என்னும் பெயரைப் பெற்றனர் போலும்! இவர் பார்க்க அவர்கள் எங்கு சாட்சி சொல்லினர்களோ?

No. 310

In The Subordinate judge's Court of Madura (East) Original Suit No 33 of 1898.

66th Witness for Defendants solemnly affirmed.

Witness' name—*Neelamega Mudali*.

Father's name—*Valavanda Mudali*.

Residence—*Madura*.

Caste—*Kaikala Mudali*.

Religion—*Sivite*.

Profession—*Climber of trees*.

Age—22.

I am climber of cocoanut and palmyra trees and extract toddy. We cut cocoanuts and oleis and sell them. My father and my grand-father have been following this profession. I have been climbing ever-since I attained years of discretion. (Witness shows marks on his feet and hands indicating that he is a climber by profession) By caste I am a Kaikala Mudali.

*Cross-examination:—*

I climb palmyras in Tiruvapadayar village.—I was extracting toddy in Alankanallur for one year. It is 10 miles from here.— I may climb 50 trees a day— I get 3 annas for gathering cocoanuts from 30 trees. My pay is $10\frac{1}{2}$ Rs. for climbing trees for toddy per month. I have a house.

(Signed) T. Varada Rao

Subordinate Judge

8—4—1899.

Appeals Nos. II and 77 of 1900. Courts Printed Record Page 380.

இந்த ஐக்கோர்டு ரிக்கார்டை கவனிப்பாராயின், நமது கலியாணசுந்தா முதலியாருக்கு ஒருவாறு அறிவுண்டாகலாம். நீலமேக முதலியாரும், வாழவந்த முதலியாரும் பரம்பரையாக தென்னை, பனை மரங்களி லேறி கள்ளிறக்கினவர்கள். அப்படி பரம்பரை மர மேறி யாகிய நீலமேக முதலியார் மதுரை கோர்ட்டில் சாட்சியஞ் சொல்லியிருக்கின்றார். சாட்சி சொன்ன பரம்பரை மர மேறியாகிய நீலமேக முதலியாருக்கு சாட்சி என்னும் பெயராவது, சான்றார் என்னும் பெயராவது வழங்கி வராது போனதற்குக் காரணமென்னை? அம் முதலியாரும் மர மேறி சாட்சி சொன்னவர்தாமே!

மலையாளத்தில் ஈழுவ சாதியார் மர மேறுபவராவர். அம் மர மேறுபவர்களாகிய ஈழுவர் சான்றார் என்ற பதம் தங்களுக் குரித்தான தல்லவென, 1924௵ ஏப்ரல் ௴ 22ந் தேதி "சுதேச மித்திர" னில் ஒரு ஈழுவ கனவான் எழுதியுள்ளார்.

சென்ஸெஸ் கமிட்டியாரும், ஈழுவருக்கு சான்றார் என்னும் பெயரும் உரிதெனக் கூறினார்களில்லை. அதனால் மர மேறுபவராகிய ஈழுவருக்குச் சாட்சி என்னும் பெயர் ஏற்படாது போனதற்குக் காரணமென்னை?

இச்சென்னை இராஜதானியில் ஏறக்குறைய இருபது சாதிகள் மர மேறி ஜீவிப்பதாக, குடிமதிப்புக் கமிட்டியாரும், "தென்னிந்தியாவின் சாதிகளும்,குலங்களும்" (**Castes & Tribes of Southern India**) என்னும்புத்தகத்தில் தர்ஸ்டன் துரையுங் கூறியுள்ளார்கள். அவ்விருபது சாதிகளுக்குள் சாட்சி என்னும் பெயரை நாடார், கிராமணிகளுக்கே உரியதெனக் கூறினார்களே யன்றி, அவர்களன்றி மற்ற மர மேறுஞ் சாதியார்களுக்கும் சாட்சி என்னும் பெயர் உரியதெனக் கூறினார்களில்லை. ஆகவே, சாட்சி என்னும் பெயர் மரம் ஏறுவதால் ஏற்பட்ட பெயரென்பது சுத்த ஆபாசமென வறியலாம். சாட்சி குலத்தவர் அல்லது சான்றார் குலத்தவர் மர மேறுவது நீலமேக முதலியார், வாழவந்த முதலியார் முதலியோர் மர மேறுவதைப் போலென வறிவர். மர மேறுவது அவர்கள் குலத் தொழிலல்ல. மா மேறும் நீலமேக முதலியார் சாதிப் பெயர்களில் எவ்விதம் கள் தொழில் அல்லது கள் சப்தம் விளங்கவில்லையோ, அதே போல் சாட்சி என்னும்பெயரிலாவது, சான்றார் என்னும் பெயரிலாவது, நாடார் என்னும் பெயரிலாவது கள் சப்தம் கிடையாது. இச்சாட்சி, சான்றார், நாடார் என்னுஞ் சொற்களின் சப்தாதி விபரங்கள் எம்மால் எழுதப்பட்டுள்ளதும், 200 பக்கங்கள் கொண்டதுமாகிய "நமது குலத் தொழில்" என்னும் நூலில் விபரமாகவும், விரிவாகவுங் காணலாம்.

இவர் எடுத்துக் கொண்ட ஆராய்ச்சிக்கு நீண்ட அறிவு வேண்டும். அதோடு நூற்களின் போக்கையுங் கவனிக்க வேண்டும். சாட்சி சொன்னதால் மர மேறிக்காவது, சூரியனுக்காவது, அதுவே சாதிப் பெயராக நிற்கமாட்டாது. முதலில் சாதிப் பெயர்கள் வந்த வழியை யறிய வேண்டும். அவர் இவ்வளவு ஆராய்ச்சி யில்லாமல் நானும் மேயோவைப் போன்ற அறிவாளி என வெளிவந்துவிட்டார். தம்மை எந்த வகையால் அறிவாளி யென மதித்து வியாச மெழுதினரோ? சம்பந்தங் காட்ட முடியுமா? இதெல்லாங் கலி காலக் கூத்தே! அக்குளறிவழி இவர் எழுதிய உரைகளெல்லாம் தலைக் காணியுரைகளே யன்றி, ஒன்று கூட நூலுக்கு முன்னிற்காது. இருப்பினும் அவரது குளறி வழிதலை யொருபுறம் ஒதுக்கி எமது ஆராய்ச்சியை அறிவிப்பாம்.

ஸர்வ ஸாக்ஷி என்னும் பெயர் சிவபிரானுக்குரியதாக வியாச பாரதம், அநுசாஸன பருவம் 48-வது அத்தியாயத்தில் உப மன்னியர் கிருஷ்ணனுக்குச் சொன்னதாகவும், அதை கிருஷ்ணன் தர்ம புத்திரருக்குச் சொன்னதாகவுமுள்ள "சிவ ஸகஸ்திர நாம"த்தில் ஒன்றாக விளங்குகின்றது. ஸர்வ ஸாக்ஷி என்றால் சர்வத்தையும் உள்ளும் புறமும் அறிந்தவர் எனப் பொருளெழுதி யுள்ளது.

ஸாக்ஷி என்னும் பெயர் விஷ்ணுவுக்குரியதாக, வியாச பாரதம் அநுசாஸன பருவம், 254-வது அத்தியாயத்தில் பீஷ்மர் தர்ம ராஜருக்குச் சொன்னதாகவுமுள்ள "விஷ்ணுசகஸ்திர" நாமத்தில் ஒன்றாக விளங்குகின்றது. ஸாக்ஷி என்றால் எல்லாவற்றையும் பார்ப்பவர் எனப் பொருளெழுதி யுள்ளது. இவற்றால் சாட்சி சொன்னதால் சிவனுக்கும், விஷ்ணுவுக்கும் ஏற்பட்டதாகத் தெரிய வில்லை. அறியும் அறிவாலேயே ஏற்பட்டது.

கர்ம ஸாக்ஷி என்னும் பெயர் சூரியனுக்குரியதாக அமரம், பிரதம காண்டம், திக்வர்க்கம் 24-வது சுலோகத்தில் சூரியனுக்குரிய பல பெயர்களில் ஒன்றெனக் கூறியுள்ளது. கர்ம ஸாக்ஷி என்பதற்கு குருபாலப்ரபோதிகாவில் "கர்மலுக்கு ஸாக்ஷி" எனப் பொருளெழுதியுள்ளது. அதாவது, ஜீவர்களின் கர்மங்களை யறிபவன் என்பதேயாம். இதனால் சூரியனுக்கும் அறியும் அறிவால் ஏற்பட்டது.

சான்றேன் என்னும் பெயரும் சூரியனுக்குரியதாக திவாகர நிகண்டுகளில் கூறப்பட்டுள்ளது. சான்றோன் என்பது தமிழ்ப் பெயர். சாட்சி என்னும் கிரந்த பதத்தின் பிரதி பதம். சான்றோன் என்பதும் சூரியனுக்கு அறியும் அறிவாலேயே ஏற்பட்டது.

சான்றேன் என்னும் பெயர் அறிஞருக்குரியதாக திவாகர நிகண்டுகளில் கூறப்பட்டுள்ளது. அது அவர்களுக்கு பல நூற்களை அறியும் அறிவால் ஏற்பட்டது. "மறையினொடெழுகும் பன் மாண்கலைகள் போன் மாண்ட கேற்வித் துறையினொடெழுகுஞ் சான்றோர்" என்னுந் திருவிளையாடற் புராணம் சங்கப் பலகை தந்த படலம், 17-வது செய்யுளால் அறிஞருக்கு அறிவால் சான்றோர் என்னும் பெயர் ஏற்பட்டதென வறியலாம்.

சான்றேர் என்னும் பெயர் அரசருக்கும் உரியதாக சங்க நூற்களில் கூறப்பட்டுள்ளது.

புறநானூறு, 63-வது அகவல்.

"தேர்தா வந்த சான்றோ ரெல்லாம்
தோல்கண் மறைப்ப வொருங் மாய்ந்
( தனரே"

என்பதில் "தேரின் பேரிலேறி போருக்குச் சென்ற சான்றோர் (அரசர்) எல்லாம் தாம் பிடித்த பரிசை தம் கண்ணை மறைப்பப் போர்க்களத்தில் விழுந்திறந்தனர்கள்" எனப்பட்டுள்ளது. தேரி லேறி வருபவரும், பரிசைப் பிடித்து சண்டைக்குச் சென்று இறந்தவர்களும் அரச ரெனவே யறியலாம்.

புறநானூறு, 301-வது அகவல்.

"பல் சான்றீரே பல் சான்றீரே
குமரி மகளிர் கூந்தல் புரைய
வமரி னிட்டவருமுள் வேலிக்
கல்லென் பாசரைப் பல் சான்றீரே"

என்பதில் "பகைவர்களால் தீண்ட முடியாத முள் வேலியால் சூழப்பட்டு, சப்திக்கின்ற படை வீட்டை உடைய சான்றவர்களே! சான்றவர்களே!!" என வழைக்கப்பட்டுள்ளது. படை வீட்டை யுடையவர்கள் அரசர்களே யாவர். இத்தகைய பகுதிகள் சங்க நூற்களில் குவிந்து கிடக்கின்றன. அவைகளை எல்லாம் "சான்றார் என்னுஞ் சொல் ஆராய்ச்சி" என்னும் நூலில் வெளியிடுவோம். அரசர்கள் சாஸ்திர ஆராய்ச்சி அறிவுடைமையால் சான்றோர் எனப் பட்டனர்கள். கல்வி யறிவுடைமை அரசருக்குரியது. "கல்லா வரசனும் காலனும் நேரொக்கும்" என திருமந்திரத்தில், திருமூலநாயனார் கூறியதும் இவ்வகையாலேயே யாம்.

சீவக சிந்தாமணி, கனக மாலையா ரிலம்பகம் 126-வது செய்யுள்.

"காவலன் மக்க ளாக்கங்
கண்டு கண் குளிர்ந்து நோக்கி
யேவலானரசனென்றோ
விருபிறப்பாள ரல்லார்க்
காவதன்றின்ன மாட்சி
யவனையா னிகளம் பெய்து
காவல் செய்திடுவல் வல்லே
காளையைக் கொணர் மினென்
றான்"

(இ—ள்) "அரசன் சீவகன் கல்வியைக் கண்டு மகிழ்ந்து நோக்கி அந்த ஏவலான் ஒன்று அரசனாதல், ஒன்று அந்தணனாதலாம். இரண்டு மொழிந்த சாதியிலுள்ளார்க்கு இக்கல்வி யுண்டாகாது. ஆதலால் அவனை யான் நீங்காததொரு தளையை யிட்டுச் சிறை செய்வேன். இப்பொழுதே அவனைக் கொணர்மி னென்றானென்க" என நச்சினார்க் கினியர் உரை எழுதி யுள்ளார். சீவக சிந்தாமணி, திருத்தக்க தேவர் என்னும் சோழ ராஜனால் இயற்றப்பட்டது. அச் சோழ ராஜனே கல்வியை தம் அரச குலத்தவருக்கும், அந்தணருக்குமே உரிய தென வரையறுத்துள்ளார். இதனானே திருவள்ளுவ நாயனாரும் குறள்ல் கல்வியை அறத்தியலில் வையாமல் அரசியலில் வைத்தது. அப்படி வைத்தவரும் இறை மாட்சிக்கு அடுத்தே கல்வியை வைத்துள்ளார். இதனானும் கல்வி அரசர்களுக்குரிய தென வறியலாம். சாஸ்திர அறிவுடைமையால் பிராமணர் சாஸ்திரி எனப் பட்டதைப் போல கல்வி யறிவுடைமையால் அரசர்கள் சான்றோர் எனப் பட்டனர்கள். இவ்வகையிற் சார்ந்தவர்களே ஏனாதிநாத நாயனாரும், அவர் வம்ஸத்தவர்களுமாவர்.

சாக்ஷி, சான்றார் என்னும் பெயர்களை ஏனாதிநாத நாயனாரும், அவர் குலத்தவர்களும் சாதிப் பெயராக வைத்து வழங்கி வந்ததாகப் பெரிய புராணங் கூறுகின்றது. அவர்களும் அரசர்களா யினமையின் கல்வி யறிவைப் பெற்றவர்களென மதிக்கப் பட்டது. இன்னொரு வகையாலும் உபமன்னியர் பக்த விலாசத்தில் "சாக்ஷி குலோத்பவா" எனக் கூறியிருத்தலின் சூரிய குலத்தவர் எனவுஞ் சொல்லலாம். சூரிய குலம் அரசருக்குரிய தென்பது சொல்லாமலே யமையும். இவ்விருவகையிலும் "சாக்ஷி, சான்றார்" என்னும் பெயர்களை யுடையவர்கள் அரசர்கள் எனவே முடிக்கப்படும்.

உபமன்னி பக்த விலாசம், 30—வது அத்தியாயம், ஏனாதிநாத நாயனார் சரிதம், 3—வது சுலோகம்.

"தஸ்மிந்நே நாதி நாதாக்ய
ஆசீத் சாக்ஷி குலோத்பவா
நிருப ஸஸ்திர கலாசார்யஸ்
விவபக்தாங் க்ரீஸக்ததி"

எம். கலியாணசுந்தா முதலியார் இச்சுலோகத்தை ஆழ்ந்து கவனிப்பாராயின் உண்மையை யறியலாம். இச்சுலோகத்தில் "சாக்ஷி குலத்தவர்" என்பது மாத்திர மல்ல, "நிருபர்" என்றும், "சஸ்திர கலாசாரியார்" என்றும் வைக்கப்பட்டுள்ளது. இவ்விரு வாக்கியங்களுக்கு அனுசாணையாக பெரிய புராணத்தில் "வடிவாட் படை பயிற்றுந் தன்மைத் தொழில்" எனப் பட்டுள்ளது. ஆகிய இம் மூன்று பகுதிகளையும் பார்ப்பாராயின் சாக்ஷி அல்லது சான்றார் என்பவர்களை க்ஷத்திரியர் அல்ல வெனக் கூற அவரால் முடியாது. சான்றாராகிய ஏனாதிநாத நாயனார் செய்த ஆயுதத் தொழிலும் அரசருக்குரியது.

பிரகஸ்பதி ஸ்மிருதி.

"இஜ் யாத் யயனதா னேச
ப்ரஜாநாம் பரிபாலனம்,
சஸ்த்ராஸ்த்ர தாரணஞ் சேவா
கர்மாணி க்ஷத்ரியஸ் யது"

(இதன் தொடர்பு 7-ம் பக்கம் பார்க்க)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## பொழுது போக்கு.

(பொய்யில்லான் பொழிந்தது.)

நாடார்களின் பண்டைய நாள்முதல் இன்றைய நாள் வரையுமுள்ள பெருமையை சுருதி, யுக்தி, அனுபத்தான் எந்த அறிவாளியும் அறியாமற்போவதற்கில்லை. இத்தகைய பெற்றிவாய்ப்புள்ள சமூகத்திற்கு இடைக் காலத்தில் துவேஷகாரணமாய் ஏற்பட்ட தென் மூன்று ஜில்லாக்களில் ஆலயப்பிரவேசத் தடை, இற்றை நாளிலும் வழக்கத்திலிருந்துவருகிறது. இத்தடை நாடார்களின் மனம் ஈர்த்ததொன்றில்லை. இதனால் அவர்களுக்கு முழுகிப்போனதொன்றுமில்லை. புன்னெறி சென்றார்களின் புன்செயலென ஒதுக்கித்தள்ளிவிட்டார்கள். அவர்களுக்குத்தெய்வ வழிபாட்டுக்கு ஆலயங்கள் இல்லாமலில்லை. தம்மகத்தே லக்ஷ லக்ஷமாய்ச் செலவுசெய்து ஆங்காங்கே தேவாலயங்கள் நிறுவி சிறப்புடன் நடாத்திவருகிறார்கள். ஆகையால் பிரவேச உரிமையில்லாக் கோயில்களில் பிரவேசிக்கப் பாடுபட வேண்டுமென்ற அவசியமும் ஆத்திரமும் அவர்களுக்கு இல்லை. இன்னும் எத்தனை ஆலயங்கள் கட்டி முடிக்கவும் இயல்புள்ளவர். ஆனால் தற்போது பாரதமாதாவின் விடுதலைக்காக, நாட்டிடை சுதந்திரம், சமத்துவம், சுயமரியாதையென்ற வியக்கங்கள் இடி இடென முழங்கிக்கொண்டிருக்கும் அதிர்ச்சிவாய்ப்பட்டு, தேசத்தை வேண்டி, இப்புனித வியக்கங்களில் முனைந்துள்ளார்களாகையால், முதலில் தமக்குள்ள ஓர் குறையாகிய ஆலயப்பிரவேசத்தடையை நீக்கி சுதந்திரம் நிலைநாட்ட நாட்டங் கொண்டுவிட்டார்கள். நாடார்கள் மனப்பூர்ணமாயெடுத்த எந்த ஒரு நல்ல காரியத்தையும் ஜெயமுடிப்பின்றிப் போடார்கள் என்று நாட்டாருக்குத் தெரிந்தேயிருக்கலாம். காந்தியும் இருக்கிறார்; அவர் ஓதிய மந்திரமும் இருக்கிறது. ஆகையால் நாடார்கள் தமது குறையைக் கூடிய சீக்கிரத்தில் ஒழித்துவிடுவது திண்ணம். அதற்கான கிளர்ச்சி நடைபெற்று வருவதாகவே தெரிகிறது. இதை தடையேற்படுத்தின கோயில் அதிகாரிகள் கவனிக்க வேண்டும். கால தேச வர்த்தமானத்தையறிந்து அவர்களே முதலில் விட்டுக்கொடுத்துவிட்டால் தேசப் போற்றுதலுக்குரித்தாராவார்கள். இவ்வழிக்கு வாராதிருந்து பின் போராட்டத்தின் ஜெயங்காரணமாய் விட்டுக்கொடுப்பதில் புகழ்ச்சிக்கிடமில்லை. ஆகையால் அவர்கள் ஆலோசித்து ஒரு முடிவுக்கு வருவார்களாக.

* * *

மானிட சடமெடுத்த பயன்தான் என்னே? 'உண்டுண்டுறங்குவதைக் கண்டதேயல்லாது ஒரு பயனும் கண்டிலேன்' எனும் ஒரு பெரியார் வாக்கு நம் நாட்டில் பலர் விஷயத்தில் பலிதமாகியிருக்கிறது. ஏன் பிறந்தோம்; எதற்கிருக்கின்றோம் என்ற எண்ணம் உதிக்கவேண்டும். அப்போதுதான் தம் தம் கடமைகளெல்லாம் முன்தோன்றலாகும். ஒருவர் தன் மாட்டே, குடும்பம்பற்றி, குலம் கொண்டு, தேசம் முன்னிட்டு, உலகம் பொறுத்து ஆற்றவேண்டிய கடமைகள்எனப்படிப்படியாயுள்ளன. விரிந்த நோக்கங்கொண்டு யாவற்று கடமைகளையும் ஏற்று நடப்பாரே மனித சடலப் பூரணப்பயன் பெற்றோராவர். யாரும் குடும்ப வரையிலும் தம் கடனாற்றாதிருப்பதில்லை. அதற்கடுத்ததவையாகிய குலத் தொண்டு முதல் உலக ஊழியம்வரையும் கடமை செலுத்துவார் மிகுதியெனக் கூறுவதற்கில்லை. இவ்வகையில் ஈடுபட நிலைமையிலார் பற்றி யாமொன்றும் சொல்வதற்கில்லை. இருந்தும் இல்லாதுபோலிருப்பார்க்கே இது குறிக்கும். ஒரு குலமோ அல்லது தேசமோ உச்சஸ்தானம் எய்துவது அதனதன் உறுப்புகளாகிய மக்களின் கடமையாகும். 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற ஆன்றோர் வாக்கிய மணி அடித்துக்கொண்டிருக்கிறது. இவ்வோசையின் தத்துவத்தை யெல்லாரும் உணர்ந்து தம்பாற்பட்ட பரோபகார வேலைகளை இயன்றவரை மேற்கொண்டு அதன் பயனாலாய பரிமணத்தை நுகர்ந்து கொண்டிருப்பார்களாக.

* * *

கடன்படல் யாருக்கும் இயல்பு. இதனால் கடன் கொண்டாருக்கு வெகு கலக்கம் ஏற்பட்டுவிடுகிறது. என் செய்வது! கடன் வாராதிருக்க எக்காரியத்தையும் முன் யோசனையுடன் செய்திருக்கவேண்டியது. அஃதின்றி கண்டதே காக்ஷி கொண்டதே கோலம் என்று செய்துவிட்டால் முடிவு கடன் கொண்டாரால்தான். இது மதி பொறுத்ததாகும். விதி பொறுத்தும் விளைந்துவிடுகிறது. நல்லபலனை யெதிர்பார்த்துச் செய்யினும் நஷ்டத்திலிழுத்துவிடுகிறது. இதற்கு யார் என் செய்ய வல்லார்? கடன்பற்றி கலக்கங்கொண்டேயிருந்தால் பின் தம் தொழிலபிவிர்த்தி தடைபட்டுப்போம். ஆகையால் கடன் கொடுத்தவரை இயன்றவரையில் திருப்திபண்ணி, தைரிய லட்சுமியைமட்டும் விட்டுவிடாது பட்ட கடனை ஓர்படிப்பினையாக வைத்து மேற்கொண்டு காரியத்தை விடாது நடத்திவருவதே லக்ஷணமாகும். இவ்விலக்ஷணமே பிந்தி நல்ல பலனெய்தலுக்கு அனுகூலந்தரும்.

* * *

ஜனோபகாரமாகவும், அதன் பயனைத் தம் வயிற்றுப்பாட்டை கழித்துவருவதுமான அடிதொழில்கள்செய்துவருகிறவர்களை மேற்குடிப்பிறந்தாரென்பார் பலர் கீழாக மதித்து கடூர முகத்தாலே நடத்திவருவது பிரத்தியட்சமாயிருக்கிறது. இவர்கள் தொழில்களால் தமக்கு எவ்வளவு பிரயோசனமுள்ளது என்ந்தெரிந்திருந்தும் அவர்களைக் கேவலமாய் நடத்துவது அநியாயமாகும். அத்தொழில்கள் செய்ய அவர்கள் கடப்பட்டுளார் எனும் அகந்தை காரணமாயே அவர்கள் பால் அன்பு செலுத்தத் தவறியவராகுகிறார்கள். இவ்வகந்தை கொள்ளுதல் பாவகரமாகும். நம்மை எதிர்நோக்கி நமக்கு உபகாரமே செய்துவரும் அவர்களை யாம் எம்மட்டும் அன்புடன் ஆதரித்துவரவேண்டும்! நாம் அலக்ஷியமாய் நினைக்கும் பணத்திற்கு அவர்கள் எப்பாடு படுகிறார்கள்! நினைக்கின் இவர்களுக்கு வேறு தொழில்கள் இறைவன் அருளானேனெவென பக்ஷாத்தாபமடையவும் இடந்தருகிறது. இப்பரிதாப மக்களை மேற்குடிப்பிறந்தாரென்பார் ஒவ்வொருவரும் பரஸ்பர அன்பு மேவிட்டு ஆதரித்துவருவாராக. இது இறைவன் கிருபைக்குகந்ததாகும்.

* * *

பஞ்சமர்களுக்கு நல்லகாலம் பிறந்துவிட்டதென்பதற்கு அறிகுறியாக சென்னை பச்சையப்பன் காலேஜில் பஞ்சம மாணவர்களுக்கு இருக்கை கிடைத்திருக்கிறது என்பது தெரிந்த விஷயம். இப்படியே பற்பல காரியங்களிலுள்ள கட்டுகளும் விட்டுப்போகும் என்பதுறுதி. சமத்துவச் சிரானன் பிறந்து தவழ்ந்துவருகிறான். இவன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளரும் பாலன். இவன் வளர வளர நாட்டிடை யெங்கும் சமத்துவம் வளரப்போகிறது. அப்பாலனுக்கிடையூறு வாராது காக்க அவனைச்சுற்றி கிளர்ச்சி சக்கரம் கிறு கிறுவென சுழன்று கொண்டிருக்கிறது. இந்நிலையில் சில நரிகள் ஊளையிட்டுக் கொண்டு அப் பிள்ளையைத்தின்னப்பார்க்கின்றன. பிள்ளை தின்ன முடியுமோ? சக்கரமல்லோ சுழன்று கொண்டிருக்கிறது! ஆகையால் நரிகள் ஜபம் சாயாது. பிள்ளைக்கும் ஹானியில்லை. மோரில் கழுதை வண்டு விழுந்த மாதிரி, பச்சையப்பன் காலேஜில் திரு. வி. வெங்கிடேஸ்வர சாஸ்திரிமட்டும் பஞ்சமர்களுக்குத்தடைசெய்திருக்கிறார். இவரை நோவதென்ன? இவரின் தகப்பனாரிடமிருந்து பற்றிய நோயாயிருக்கலாம். இனி இவர் இந்நோய்க்கு மருந்து கொள்வதுடன் இவருடைய நோய் இவருடைய வாரிசுகளுக்கு பரவாதிருக்கவும் பார்த்துக்கொள்வாராக.

---

## பேரையூர்.

பேரையூர் ஸ்ரீமான் கே. யி. பொன்னையா நாடார் அவர்கள் 25—11—27 இரவு 11-30 மணிக்கு தமது 55-வது வயதில் நோய் வாய்ப்பட்டு இம் மண்ணுலகை விட்டு விண்ணுலகு சென்றார். இவர் பிரபல வியாபாரியும், இவ்வட்டகை நாடார்களில் திலகம் போன்றவரும், சகலவர்ணத்தார்களாலும் பெரிதும் கொண்டாடப்பட்டவருமாவர். இவ்வூர் க்ஷத்திரிய பாலிய நாடார் கல்வியபிவிருத்தி சங்கத்தின் கௌரவ மானேஜராகவிருந்து நல்ல ஸ்திதிக்குக்கொண்டுவந்தஉத்தமர். ஜன சமுக ஊழியத்திலேயே தம் வாழ்நாளைச் செலவிட்ட உபகாரி. கடவுள் இவரது குடும்பத்தாருக்கும் இவரின் பிரிவாற்றாமையால் வருந்தும் ஜனங்கட்கும் ஆறுதலளிப்பாராக என்று ஸ்ரீ மு. வே. முனிசாமிநாடார் எழுதுகிறார்.

## வைதிகர்களுக்கோர் அறிக்கை.

வேத மார்க்கம் போதலானவர்கள் வைதீகர்கள் எனப்பட்டார். இவ் வைதீகர்கள் வேத மார்க்கத்தில் கொஞ்சமும் பிசகாது தடம்பற்றி, ஏதோ ஓர் குறிப்பிட்ட நல்ல (மோக்ஷ)விடத்திற்குப் போவதாக நடந்துகொண்டிருக்கிறார்கள். இது தான் ஊனப்பால் குடிப்பதற்குச் சமம். அறிந்தோ, அறியாமலோ இவ்வெண்ணத்தைக் குரங்குப் பிடியாய் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். யாருக்கும் ஒரு காரியத்தில் நாட்டம் சென்றுவிட்டால், அது நல்லதோ, தீயதோ வென்பதை உணர்வது அரிது. அக்காரியத்தின் இயல்பு ஏனையருக்குத்தான் நன்கு தெரியும். இவ்வைதீகர்கள்தாம் எந்தக்குறிப்பிட்ட இடத்தை நோக்கிச் செல்கிறார்களோ அந்த விடத்திற்கே எல்லோரும் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையறியவேண்டும். எந்த ஒரு இடத்திற்கும் ஓர் நியாய வழியுண்டு. அவ்வழி செல்வதே நியாய மானது ஆகும். ஓரிடத்திற்குப் போக ஓர் பாதையை நேர் ஒழுங்கு பண்ணினால், பல விலைமதியுள்ள கட்டடங்களையும், பயிர் பச்சை நிலங்களையும் அது ஊடுருவிப் போகுமன்றோ? ஊடுருவிப்போயினுமென்ன; அவ்வழிதான் செல்ல வேண்டுமென தனக்குள்ள அதிகாரத்தால் தனக்குப்பாதை விடுவதற்காக அக் கட்டடங்களை யிடித்தும், பயிர் பச்சைகளை யழித்தும் செல்வதா? இது அநியாயக் குறிப்பல்லவா? உசிதம் போல் விலகிச் செல்வதல்லவா நியாயம்? இப்படித் தம் வல்லபத்தால் கட்டடங்களை யிடித்தும், பயிர்பச்சைகளை யழித்தும் வழிகொண்டு போவதே யொக்கும் வைதீகர்களின் செய்கை. கட்டடங்களும், பயிர் பச்சைகளும் பாழ்போனவர் போன்ற அக்காலத்து அதிகாரமில்லா ஏனையவர்கள் இவ்வைதீகர் போக்கிற்கு வழிதந்து தமது சுதந்திரம், சுயமரியாதை முதலியவற்றைப் பறிகொடுத்துவிட்டார்கள். அன்றுதொட்ட அநியாயம் இன்றும் வழக்கத்தில் இருந்துவருகிறது.

வேதத்தில் சொல்லியபடி நடக்கிறோமென்றால், நடக்கையின் பயனறியாது செல்வது குருட்டு நம்பிக்கையாகும். குருட்டு நம்பிக்கையினால்தான் இத்தகைய அநியாயம் செய்கிறார்களென்பதானால் ஒருவாறு மன்னிக்கலாம். இது அவ்வகைக்குமல்லோபுறம்பாயிருக்கிறது! ஏன்? இவர்கள் கூறும் வேதம் இவர்களாலாயே ஆக்கப்பட்டு உலகிடை வெளியானது. என்ன கொடுமை! ஏதோ ஓர் வித சக்திகொண்டு எல்லோரையும் மயக்கி குதிரைபோல் சவ்வாரி செய்துகொண்டார்கள்.

அறியாமை காரணமாய் இவர்கள் அநியாயத்திற் கிடங்கொடுத்து விட்டதால், இவர்கள் பாதசேவைக்காளாக வேண்டியதாயிற்று. இறைவன் ஒருவன் எல்லோருக்கும் பொதுவானவன். அவன் பக்கம் பாரபக்ஷமென்பது அணுவும் கிடையாது. தன் பெயரால் அநியாயம் நடைபெறுவதைப் பொறுத்தமட்டிலும் பொறுத்துப்பார்த்தார். மிஞ்சுவதைக்கண்டு மக்களிடையுள்ள அறியாமைத் திரையை நீக்கிவிட்டார்.

வேதமும்பொய்; எழுதிய வியாசனும் பொய்யன்; பிராமண வேதமேயன்றி பிரமவேதமல்ல வென்று மக்கள் கண்டுகொண்டார்கள். பிடரிமேல் ஏறியிருந்த வைதீகச் சனியனை உதறித்தள்ளினார்கள். இனி அநியாயத்திற்குள்ளிருப்பது பேடித்தனமென உணர்ச்சி கொண்டுவிட்டார்கள். தம் சொத்துக்களாகிய சுதந்திரம், சுயமரியாதை முதலியவற்றை மீண்டும் பெற ஆர்வங்கொண்டுவிட்டார்கள். இனி யிவர்கள் நாட்டில் சமரசம் நாட்ட முனைந்து வேலை செய்யும் எழுச்சியை யாராலும் அழிக்கப்போமோ! ஆங்காங்கு பரவியுள்ள எம்முகத்து வைதீக விஷமங்களையும் பஞ்செனவூதிவிட, வரிந்துகட்டி வேலைகள் நடத்திவருகின்றனர். கோரிய கருமம் சீரிய வழியில் கூடிய சீக்கிரம் முடிவுறப்போகிறது. எல்லாம் சாத்வீகப் போராட்டந்தான்.

இந்நிலை கண்டும் வைதீகர்கள் மதில்மேல் பூனைபோல் உட்கார்ந்திருக்கிறார்கள். இதில் சாரமன்று. நியாயவழிக்கு வந்துவிடவேண்டியதுதான். இதுகாறும் தாங்கள் செய்த அட்டூழியத்திற்காக என்னமும் செய்துவிடுவார்கள் எனப்பயப்பட வேண்டியதில்லை. மக்கள் பெருந்தன்மையுடன் பிழை பொறுப்பார்கள். ஆகையால் அச்சமின்றி மதில் விட்டுக் கீழிறங்கிவந்து சமரசம் ஏற்றுக் கொள்ளவேண்டும். வேதம் விதித்ததுதான் விதி யென்றிருப்பின் விளையும் விபரீதங்கள் பலவாகும் என்பதை முன்னக் கூடியே தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஓர் சம ரஸன்.

## ஆசியக் கொத்து.

வழிப்போக்கன்—ஏகாலி! ஏனப்பா அழுதுகொண்டு நிற்கிறாய்?

ஏ—என் முத்துமாலையைக் காணேனையா.

வ—ஆகா! உன்னிடத்தும் முத்துமாலையிருந்ததா?

ஏ—ஆமையா; இப்போது தான் பொதியிறக்கி விட்டுப்போனது.

வ—கழுதைக்குப் பேர் முத்துமாலையோ!

---

பெண்ணே! உன்னைத் தனித்துவிட்டுப்போக வருத்தமாயிருக்கிறதே.

பெ—அப்படியானால் தங்களுக்குப் பதிலாக இன்னொருவரைச் சேர்த்துக் கொள்கிறேன்.

---

குருக்களே! என்னை ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

கு—சகல சம்பத்தும் உண்டானால் குறைவின்றிருப்பாயாக.

---

தம்பி சுப்பியா! ஐயரை சிராத்தத்திற்கு விரைவாய் வரச்சொல்.

சு—ஐயரே! சிரார்த்தத்திற்குக் கழுதைப் பாய்ச்சலில் வந்துசேருங்கள்.

---

அண்ணாவி! நன்றாய் (குழல்) ஊதியிருக்கிறீர்கள்.

அ—அப்பனையங்காரைப் பார்க்கிலுமா (தேகம்) ஊதியிருக்கிறேன்?

---

பையன்—ஐயா! கதவு திறக்கமுடியவில்லை.

தகப்பனார்—எப்படித் திறக்கிறாய்?

பை—வெளியிலிருந்து உள்ளே வரும்போது தள்ளினதுபோல்தான் தள்ளுகிறேன்.

---

விகடா! இன்றுதான் உனக்குக் கல்யாணமோ?

வி—ஆமாம்.

கேள்வி—திருப்பூட்டுதல் எப்போது?

வி—கல்யாணம் முடிந்தபின்பு.

---

உபாத்தியாயர்—பையா! இது வெள்ளாடா? செம்மறியாடா?

பை—வெள்ளாடுமல்ல; செம்மறியாடுமல்ல; கருவாடு.

உ—முட்டாள்—கருவாடு இன்னும் ஞாபகம்.

பை—நிறம் பார்த்துப் பேசுங்கள்—கருவாடு (கருமையான ஆடு.)

---

## முன்னேற்றசாதனம் பத்திரிகையபிவிருத்தியே.

நம் குல முன்னேற்றத்திற்கு பத்திரிகையே அத்தியாவசியமென்பதை நம் நாடார் குலத்தினர் யாபேரும் தெரிந்த விஷயமே. நம் இந்திய தேசத்தில் எத்தனையோ லட்சக்கணக்கான நாடார்கள் சீரும் சிறப்பும் பெற்று வசிக்கும் இக்காலத்தில் நம் மித்திரன் குறைந்த பக்கத்துடனும் குறைந்த சந்தாவோடும் இருப்பது துர்ப்பாக்கியமே. துவேஷிகள் தம் துடுக்கடக்கநானே நாடார் சிங்கமென பூமி எல்லாம் நடு நடுங்க வெளிக்கிளம்பிய நமது குல மித்திரன் பிரகாசமாகி எத்தனையோ வருடங்களாயின என்பதை நம் நாடார் குலத்தினர் யாவரும் அறிந்தே இருப்பார்கள் எனச் சொல்வதில் குற்றமில்லை. அறிந்திருந்தும் மித்திரன் விஷயத்தில் இவ்வளவு தூக்கமேன்? நம் மித்திரன் விருத்திமுகம் நோக்கி நிற்கும்படி நமது குலத்தினர்களுக்கு எனது அன்பார்ந்த வந்தனத்துடன் தெரியப்படுத்துகிறேன்.

பொ. கோபாலகிருஷ்ண நாடார்,
காலி, இலங்கை.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection





சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம

மேது மின்றியெப் பொருட்கு மெவ்விட
த்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்

சோதியை மாத்தா வெளியைமனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்

தீதில் பரமாம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

## நாடார்குலமித்திரன்

பிரபவ ஞு கார்த்திகை மீ உ௰௨

---

## இனியாவது நல்ல புத்தி வருமா?

இந்திய அரசியல் சீர்திருத்த விசாரணைக் கமிஷன் நியமன விஷயமாக பிரிட்டிஷ் காமன் சபையிலும், லார்டு சபையிலும் நடக்க வேண்டிய சடங்குகளெல்லாம் நடந்து முடிந்து விட்டன. அச்சடங்குகளுக்குப் புரோகிதரா யிருந்து மந்திரம் ஜெபித்த இந்தியா மந்திரி லார்டு பர்க்கன் ஹெட் தம் மனதிலுள்ளதை ஒன்றும் ஒளியாமற் சொல்லி விட்டார். அவர் கூறும் கூற்றுகளெல்லாம் ஒருவாறு உண்மையே என்றாலும், தற்கால நிலைமையை மட்டும் தமது கூற்றுக்கு எடுத்தாண்டது முற்றிலும் பொருத்த மற்றதாகும். பூர்வீக இந்தியாவையும், புராதன ஐரோப்பாவையும், ஐரோப்பிய யுத்தத்தின் போது மேற் காங்கத்தில் பிரிட்டிஷாருக்கு ஏற்பட்ட ஆபத்தில் உதவியது யார் என்பதையும் மந்திரி மறந்தே விட்டார்.

இந்து முஸ்லீம், பிராமணர் பிராமணரல்லாதார் வேற்றுமைகளை வெகு பிரமாதமாக எடுத்தாண்டிருக்கிறார். இவ்வேற்றுமையில்லாத காலத்திலாவது சுயராஜ்ய மளிக்கச் சம்மதித்தார்களா? இனி வேற்றுமை ஒழிந்தாலேனும் சம்மதிப்பார்களா? உள்ளொன்றும், உதட்டி லொன்றுமாகப் பேசுவது இராஜ தர்மமும், இராஜ தந்திரமுமாகுமா? இருபது கோடி ஜனங்களுக்கு ஒன்றுமே தெரியா தென்று சொல்வது உண்மையாயினும், இம் முட்டாள்த்தனத்துக்குக் காரணம் யார்? இருநூறு வருடங்களுக்கு மேலாக ஆண்டும் யார் நம்மை ஆள்கிறார்களென்று அவர்களுக்குத் தெரியா தென்று மந்திரி வெட்க மின்றி வெளியிடலாமா? இதைக் கேட்ட இதர ராஜாங்கம் சிரிக்காதா? ஆறு கோடி தாழ்த்தப்பட்ட வகுப்பினரைப்பற்றி மந்திரி வெகு தயாளமாய்ப் பேசியிருக்கிறார். தாழ்த்தப்பட்டவர்களுக்கு பிரிட்டிஷ் அரசியலில் என்ன விசேஷ சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன? ஜஸ்டிஸ் கட்சியும், பிராமணரல்லாத இயக்கமும் உண்டாகு முன் வெள்ளையர் பங்களாவில் பட்லர் வேலையைத் தவிர வேறெந்த உத்தியோகமாவது தாராளமாய் வழங்கியதுண்டா? தாழ்த்தப்பட்டவர்களையும், குறைந்த ஜனத் தொகையுடையவர்களையும் சுயமரியாதையுடன் ஸ்தல ஸ்தாபனம், நீதி மன்றம், அரசியல் மன்றங்களில் சமமாகக் குந்த வைத்தது டாக்டர். நாயரா? லார்டுபர்க்கன் ஹெட்டா? என்று கேட்கின்றோம். எக்காலமும், எல்லா இந்தியர்களும் சோலைக் கிளிப் பிள்ளைகளாக இந்தியா மந்திரி எண்ணுவது பெரும் ஏமாற்றமாக முடியுமென்று எச்சரிக்கின்றோம்.

இந்தியா மந்திரி இவ்வளவு ஏற்காத வார்த்தைகள் பேசிய பின்னாவது இந்தியத் தலைவரென விளம்பரக்காரர்களுக்கு நல்ல புத்தி வருமா என்று கேட்கின்றோம். பிரிட்டிஷார் எப்போதும் நம்மில் சில சுயநலக்காரர்களையும், சில வாயாடிகளையும் தங்கள் பக்கம் இழுத்துக் கொண்டு எல்லாரையும் முட்டாள்களாக எண்ணி விடுகிறார்கள். நம்மை நாமே கொடுமை செய்யும் கூத்துகளை வெளியிடுகிறார்கள். பிரிட்டிஷிலு மட்டுமல்ல, எல்லா குடியேற்ற நாடுகளிலுங் கூட நம்மை ஒற்றுமை யற்ற ஒருவகைப் பிராணிகளென்று கருதுகிறார்கள். 6 கோடி மக்களை மாக்களாகக் கருதுவதை தென்னாப்பிரிக்காப் பார்லிமெண்டிலும் எடுத்துக் காட்டினார்கள். இப்போது இந்தியா மந்திரியும் எடுத்துக் காட்டுகிறார். இதை எந்த இந்திய மேதாவியாவது தைரியத்துடன் மறுக்க முடியாமல் தலை குனிந்து ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். அதற்காகத்தான் **இனியாவது நல்ல புத்தி வருமா?** என்று கேட்கின்றோம்.

இந்தியாவைப் பற்றி முடிவு செய்ய இந்தியர்களுக்கு யோக்கியதை இல்லாதது போலும், ஒரு சிலரைத் தவிர பெரும்பாலோருக்கு ஒன்றும் தெரியாதென்றும், கூக்குரலிடுவோர் வெறும் கிளர்ச்சிக் காரரென்றும், தாழ்த்தப்பட்டவர்களைக் காப்பாற்றுவது பார்லிமெண்டே என்றும் இந்தியா மந்திரி இடித்துரைத்திருப்பதை எல்லா இந்தியத் தலைவர்களும் நன்கு உணர்வார்களா?

வேதத்தின் போலும், வர்ணாச்சிரம தர்மத்தின் போலும் மக்களுக்குச் செய்யும் கொடுமைகளைத் தவிர்த்து சுயமரியாதையை நிலை நிறுத்தி சுயராஜ்யம் பெற முயற்சிப்பார்களா? இந்தியா மந்திரி இடித்துரைத்திருப்பதற்கேற்ப ஒரு சில கற்றவர்களும், பணக்காரர்களும் வெறும் கூச்சலிட்டு பிரிட்டிஷாரை மிரட்டி, பெரிய உத்தியோகங்களையும், பதவிகளையும் பெறுவதே சுயராஜ்யமாக மதித்து வெள்ளையர் ஆசனங்களில் தாங்கள் அமர்ந்து கொண்டு மக்களை ஆளலா மென்று நினைக்கு மனப்பான்மையை விட்டு ஏழை மக்கள் கதி மோட்சத்துக்கு **மகாத்மா காந்தியைப்** போல் திரிகாண சுத்தியுடன் எல்லோரும் டாம்பீக நிலையிலிருந்து இறங்குவார்களாக.

---

# குறிப்புகள்.

### விருதுநகர் காஸ் மாபாலிட்டன் கிளப்,

மேற்கண்ட கிளப் மூன்று வருஷங்களாக அந்நகர் வாலிபநாடார்கள் பெரு முயற்சியால் நன்கு நடைபெற்று வருகிறது. 26-11-27ல் அதன் மூன்றாவது வருஷக் கொண்டாட்டம் திருநெல்வேலி ஜில்லாப் போர்டுத் தலைவர் ஸ்ரீமான் திவான்பகதூர், எஸ். குமாரசாமி ரெட்டியார் பி. ஏ. பி. எல். எம். எல். ஸி. அவர்கள் தலைமையின் கீழ் இனிது நடைபெற்றதும், தோட்டக் கச்சேரியும், வாலிபர்கள் குதூகலமும், திரு. ரெட்டியாரவர்கள் சமயோசிதமான சொற்பொழிவுகளும் மக்கள் மனதை பரவசைப்படுத்தின. இக்கிளப் வருஷாந்தர ரிப்போர்ட்டில் ஆதித் திராவிடச் சிறுவர்களையும் சரி சமமாகப் பாவித்து நடத்துகிறோம் என்று சொல்லி இருப்பது குறிப்பிடத் தக்கதாகும். பொது ஜன சமரச சன்மார்க்கவழிகளில் இக்கழகம் மென்மேலும் விருத்தியடைந்து எதிர் காலத்தில் இன்னும் விசேஷ விருத்தியுடன் விளங்கக் கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

### இருகண்மணிகளை இழந்த திந்நாடு.

சில தினங்களுக்கு முன்தான் ஸர். டி. சதாசிவ ஐயர் காலஞ் சென்றதை முன்னிட்டு தமிழ் நாடு மிக வருந்தியது. அவ்வருத்த முற்றிலும் நீங்கு முன் ஸர். பி. ராஜகோபாலாச்சாரியார் பெங்களூரில் காலஞ்சென்று விட்டதாக அறிந்து மிகவும் விசனிக்கின்றோம்.

இவ்விரு கனவான்களும் பிராமணத் திருமேனியாய்ப் பிறந்தும் பிராமணர்களின் அக்கிரமங்களை விட்டுப்பிரிந்து தங்கள் வாழ்க்கையை சமதருமத்தை நாடியே நடத்தினார்கள். அவர்கள் சர்வ அதிகாரங்களையும் வகித்து வந்த காலத்திலும் நேரான வழியை விட்டு ஒரு போதும் மாறவில்லை. பிராமணர் பிராமணரல்லாதவர், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடின்றி வாழ்க்கை நடாத்திய இரு உத்தமர்களும் உடல் நீத்தாராகையினால் இரு கண்மணிகளை இழந்த திந்நாடு என்று எழுதி மிகவும் வருந்துகின்றோம். நாடார் மகாஜன சங்கம் 3-வது 5—வது மகாநாடுகளில் இவ்விரு கனவான்களும் தலைமை வகித்துச் செய்த அருமையான சொற்பொழிவுகளும் உபதேசமும் இன்னும் நம் மனதில் நின்று நிலவுகின்றன. நாடார் சமூகமும் நாமும் இவ்விருகண் மணிகள் பிரிவாற்றாமைக்கு மிகவும் வருந்துகின்றோம்.

### ஆராய்ச்சி.

"தமிழ் நாடு" பத்திரிகையில் தமிழ் மொழியின் திரிபும் பொருளும் என்று எழுதிவரும் ஆராய்ச்சி கட்டுரைகளொன்றில் நாடார், சான்றோர் என்னும் பதங்களுக்கு முற்றிலு முரண்பட்டதாகவும் கற்றோர் ஒப்பத்தகாததாகவும் எழுதியிருப்பதை மறுத்துப் பல வியாசங்கள் வந்து கொண்டிருந்தன. அவைகளை யெல்லாம் நாம் "தமிழ் நாடு"க்கே அனுப்பும்படி திருப்பி விட்டோம். அம் மறுப்புகளை யெல்லாம் "தமிழ்நாடு" பொருட் படுத்தவில்லை யென்று கண்டனங்கள் வந்து குவிந்தன. "தமிழ் நாடு"க்கு நாமே எச்சரித்துமிருப்பதால் அவைகளையும் விட்டு விட்டோம். ஆனால் நமது நண்பர்கள் தி. கருப்பையா பிள்ளையவர்களும், விஜய துரைச்சாமிக் கிராமணியார் அவர்களும் ஞாயமான முறையில் மறுத்து தக்க ஆதாரத்துடன் உண்மையை எழுதியும் அதை மற்றப் பத்திரிகைகள் ஏற்க மறுத்து விட்டதால், அவ்விரண்டையும் ஏற்பது நமக்குடன் பாடென்க் கருதி பிரசுரித்து முடித்து விட்டோம். மேலும் "தமிழ்நாடு" தவறுதலாகப் பிரசுரம் செய்ததற்கு வருத்தம் தெரிவித்து மிருப்பதால் அதைப்பற்றி நாடார் குல நண்பர்கள் ஆயாசப்பட வேண்டியதில்லை.

நாடார்கள் பரிசுத்த வாழ்க்கையில் பகையும், பொருமையுமுள்ள யார் என்னசெய்தாலும் எழுதினாலும் பேசினாலும் உண்மையை மாற்ற ஒருவாராலும் முடியாது. நாடன், நாடான் என்னும் உயர்வான தமிழ் பதங்களுக்கு யார் யார் எவ்வித அர்த்தங் கற்பித்தாலும் அவற்றிற் கியற்கையான மூல அர்த்தத்தை ஒருவாராலும் மறைக்க முடியாது. உடலைக் கொல்லலாம்; உயிரைக் கொல்ல முடியாது. எத்தனையோ கற்றவர்கள் இதற்குமுன் இதைப்பற்றி விவாதித்துத் தோல்வியுற்றிருக்கின்றனர். செந்திநாதய்யனுக்கு செருப்படி வரையும் நடந்திருக்கிறது. நாய்குரைத்து நேரம் விடியப் போவதில்லை யென்று நாடார் குல மக்கள் இவ்விஷயத்தை விட்டுவிட வேண்டுகிறோம்.

மேலும் தற்கால சக்கரம் சமத்துவம், சகோதரத்துவம் என்ற வழியிற் சுழல்வதால் அவ்வழியில் நாமும் ஆண்டவனை முன்னிட்டு நின்று சுய மரியாதைச் செல்வனுக்குத் துணைபுரிந்து வெற்றிமாலை சூட்டுவோமாக.

# இலங்கை.

### மகாத்மா காந்தி ஓரணை விஜயம்.

மஹாத்மா அவர்கள் 23—11—27 ல் புதன்கிழமை யன்று காலை சுமார் 10—மணிக்கு மோட்டார் வாகனத்தில் வந்திறங்கினர். ஓரணை வாசிகள் அனைவரும் மதபேதமன்றி யேகோபித்து குதூகலத்துடன் வரவேற்று அன்னவருக்காக அதுதினம் செய்யப்பெற்ற அழகிய ஆசனத்தில் அமரச்செய்தனர். சுமார் 6000 பேர்கள் கூடியிருந்தனர். இதற்கிடையே உலக சிரேஷ்டராகிய காந்திமஹான் தீண்டாமை, மதுபானம் என்ற இரு விஷயங்கள் பற்றி சிறிது நேரம் உருக்கமுடன் பேசினர்.

பொது ஜன சார்பில் காந்திஜிக்கு பணமுடிப்பொன்று கொடுத்தனர். மஹாத்மாவின் வரவு இவ்விடத்திற்கு திடீரென கிடைத்தபடியாலும், வந்த 25 நிமிஷத்திற்குள் புறப்பட்டுவிட்டபடியாலும் நாடார் நண்பர்கள் அனைவர்களும் மஹாத்மாவை தனிமையாய்ப் பேட்டிகாண வேண்டுமென்றிருந்த பேரவா பூர்த்திக்கப்படாதுபோயிற்று.

ஐ. வண்டிக்கண் நாடார்.

---

### நமது மித்திரன் போஷகர் ஸ்ரீமான் கா. ஆறுமுகநாடார் அவர்கள் மரணம்.

சென்னையில் பிரபல நீல சாய வியாபாரியும், "கருணாகர ரைஸ்மில்" சொந்தக்காரரும், நாட்டாண்மைக் காரரும், எலிமெண்டரி இலவச ஆண் பெண் பாடசாலையை நடத்திவந்த வருமான ஸ்ரீமான் கா. ஆறுமுகநாடாரவர்கள் 26-11-27 காலை 6-மணிக்கு 64-வது வயதில் இம்மண்ணுலகைவிட்டு விண்ணுலகடைந்ததைக் கேட்டு நாம் வருந்துகின்றோம். இன்னவரை கொடையில் கர்ணனுக்கும், சாந்தத்தில் உதிஷ்டாருக்கும், தீரத்தில் காண்டீபனுக்கும், பலத்தில் பீமசேனனுக்கும் ஒப்பிடலாம். ஏழைகளுக் குபகாரியும், மகாதர்ம சிந்தையும், நிறைந்த செல்வமும், புகழுமுடையவர். இவர் சில வாண்டுகளாக படுக்கையிலேயே வியாதியாய் இருக்கும்படி நேர்ந்திருந்த வக்காலத்திலும் குலாபிமானங் குன்றாதவராய் தன் குல நலங்களைப் பற்றி அப்போதைக் கப்போது பத்திரிகை மூலம் தெரிந்து வந்தார். இவருடைய பிரிவாற்று ஏழை ஜனங்கட்கும், நாடார் குலத்தவர்க்கும், இவருடைய குடும்பத்தவர்க்கும் எல்லாம் வல்ல இறைவன் ஆறுதலளிப்பாராக.

---

நீத் முடையாருயிர் நீப்பினும் அன்னாரின்
பூத வுடம்பன்றிப் புகழுடம் பழியா.

---

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## பச்சையப்பன் கலாசாலை.

### ஆதிதிராவிடரைச் சேர்த்துக்கொள்ள தீர்மானம்.

நேற்று மாலை பச்சையப்பன் கலாசாலை தர்மகர்த்தர்களான திருமான்கள் திவான்பகதூர் ஜி. நாராயணசாமி செட்டியார், திவான்பகதூர் வி. திருமலைப்பிள்ளை, திவான்பகதூர் ஓ. தணிகாசலம் செட்டியார், டி. வி. நடராஜ முதலியார், பி. டி. குமாரசுவாமி செட்டியார், வி. வெங்கடேஸ்வர சாஸ்திரி ஆகியவர்கள் கூட்டத்தில் "பச்சையப்பன் கலாசாலை தர்மகர்த்தர்கள் ஜஸ்டிஸ் வாலர் கூறிய நியாயங்களை அனுசரித்து தங்கள் கல்வி ஸ்தாபனமாகிய பச்சையப்பன் கலாசாலையில் இனிமேல் ஆதித்திராவிடரைச் சேர்த்துக்கொள்ள முடிவு செய்திருக்கிறார்கள்" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திரு. வி. வெங்கடேஸ்வர சாஸ்திரி மாத்திரம் இதற்கு எதிரிடையாக ஓட் கொடுத்திருக்கிறார்.

### "நவசக்தி" நவில்வதாவது:--

பச்சையப்பன் கல்லூரியில் ஆதிதிராவிடர் சேர்க்கப்படாமலிருப்பது குறித்துச் சென்னை ஹைகோர்ட்டில் ஒரு வழக்குத் தொடுக்கப்பட்டது. அவ்வழக்குத் தீர்ப்பில் நீதிபதி குறிப்பிட்ட அநுதாப உரைகளை ஆதாரவாகக்கொண்டு பச்சையப்பன் கல்லூரி தர்மகர்த்தர்கள் ஆதிதிராவிடர்களை இனிக்கல்லூரியில் சேர்த்துக்கொள்ளத்தீர்மானித்திருப்பதைப்பற்றிக் களிபேருவகை யெய்துகிறோம். ஹிந்துக்களாகிய ஆதிதிராவிடர்களை இதுகாறும் பச்சையப்பன் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளாமலிருந்தது பெரும்பிழை. இப்பொழுது அப்பிழை யுணர்ந்து நடந்துகொண்ட தர்மகர்த்தர்கட்கு நமது நன்றியறிதலைச் செலுத்துகிறோம்.

பச்சையப்பன் கல்லூரித் தர்மகர்த்தர்கள் அடிச்சுவட்டைப்பற்றி மற்றுமுள்ள பாடசாலை அதிபர்களும் நடக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். சாதிஹிந்துக்கள் பார்வையில் நடைபெறும் பாடசாலைகள் பலவற்றுள் ஆதிதிராவிடர்கள் சேர்க்கப்படுவதில்லை. அப்பாடசாலைகள் ஆதிதிராவிடர் செலுத்தும் வரிப்பணத்தினின்றும் உதவிபெறுகின்றன. அவர்கள் பணத்தைப் பெறும் பாடசாலை அவர்களைத்தடுப்பது நலமா? என்று கேட்கிறோம். அரசாங்க உதவி பெறும் பாடசாலைகள் ஆதிதிராவிடர்களைச் சேர்த்தே தீரல்வேண்டும். இல்லையேல் அரசாங்கத்தார் அப்பாடசாலைகட்கு உதவி செய்யலாகாது. இது குறித்து ஆதிதிராவிடர்கள் கிளர்ச்சி செய்தல்வேண்டும். அவர்கட்கு மற்றவர்களும் துணை நிற்றல் வேண்டும்.

கல்லூரிகளில் ஆதி திராவிடர்களை ஏற்பது போலக் கோயில்களிலும் பிறவிடங்களிலும் அவர்களை ஏற்க அன்பர்கள் முயலல் வேண்டும். நாட்டில் இனித் தீண்டாமை தலைகாட்டலாகாது.

---

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அறிக்கை.

தென் ஆற்காடு, மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களிலுள்ள அங்கத்தினர்களின் வேண்டுகோளுக்கிணங்கி டிஸம்பர் ௴ 4௳ கூடுவதாயிருந்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களின் வருஷாந்திரக் கூட்டமும், புதிய அங்கத்தினர்களின் கூட்டமும் டிஸம்பர் ௴ 20௳க்கு மாற்றப் பட்டிருக்கிறது. மேற்கண்ட இரண்டு கூட்டங்களும் முறையே காலை 8-மணிக்கும் பகல் 2-மணிக்கும் சென்னை "காங்கிரஸ் நகர்"ரில் (எழும்பூர்வசி) கூடும். அங்கத்தினர் அனைவரும் தவறாது விஜயம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்று ஷை கமிட்டியார் அறிவிக்கிறார்கள்.

---

## அருப்புக்கோட்டை, ஸ்ரீமான் மு. மு. மு. ஞாபகச் சின்ன வாசகசாலை.

இதனுசாவில் 27-11-27ல் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திருவாளர். திருமேனிநாதர் அவர்கள் தலைமை வகித்தார். அவ்வமயம் ஸர். டி. சதாசிவய்யர் அவர்களின் மரணத்திற்கு இவ்வாசகசாலை ஆழ்ந்த அநுதாபப்படுகிறதென்றும், ஆற்றொண்ணுத் துயரத்திலாழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு தம் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிற தென்றும், அவர் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறதென்றும் தீர்மானம் எல்லோராலும் ஏகமனதாய் நிறைவேறியதென்று காரியதரிஸி எழுதுகிறார்.

---

### பிரகதீஸ்பரராலயம்.

தஞ்சை ஜில்லா திருவடமருதூருக்கு வடக்கும்,காவேரிநதிக்குசமீபமாயுமுள்ள பெரிய சாலையைச் சார்ந்து ஒரு அழகிய சிவாலயமிருக்கிறது. அதுபாடல் பெற்ற முக்கிய ஸ்தலம். பிரகதீஸ்பரராலயம் என்று அழைக்கப்படலாகும். இது கும்பகோணம் சர்க்கிள் தேவஸ்தான கமிட்டிக்குட்பட்டதாதலால் ஷை தேவஸ்தான முழு பாத்தியதையும் குறைவில்லாத டிரஸ்டியாக அவ்வாலயத்திற்கருகிலுள்ள ஒரு நாடார் கனவானுக்களித்து பார்ப்பவர் மெச்சும் நிலைமையில் திருப்திகரமாய் நடந்துவருவதைக் கேட்டு சந்தோஷிக்கிறோம். நம்மவர்களுக்கு சொந்தமான தேவஸ்தானங்களில் நம்மவர்கள் தர்ம கர்த்தாக்களாக இருப்பதோடு நில்லாமல் பிரஸ்தாப கமிட்டிக்குள்ளடங்கிய சிறந்த தேவஸ்தானங்களிலும் தர்மகர்த்தாக்களாக அமர முயற்சித்தல் தாராளமாய் சித்திக்கும். நம்மவர்கள் இத்தகைய ஸ்தாபனங்களிலு முழைப்பதில் பரிசுத்தரென்ற புகழும், புண்ணியமுமுண்டு.

சி. வே. இரத்தினசாமி நாடார்,
கும்பகோணம்.

---

### செட்டிகுளம் பண்ணையூர்.

இவ்வூர், கோவாப்ரேடிங் சொஸைட்டி பிரசிடெண்டும், இந்து ஸ்கூல் மானேஜரும், சிறந்த குலாபிமானியும், நாடார் கிளைச் சங்கக் காரியதரிசியும், தெய்வபக்தி, ஏழைகள் பேரில் அனுதாபம், பொறுமை முதலிய நற் குணங்கள் அமைந்தவரும், பெரிய தனவந்தருமான ஸ்ரீமான் சு. குமாரவேலாயுத நாடார் அவர்கள் திடீரென்று விஷவியாதியால் 18—11—27 வெள்ளிக்கிழமை யன்று தமது 58-வது வயதில் அன்னவர் குடும்பத்தினருக்கு ஆறாத்துயரை யுண்டு பண்ணி சிவ பதவியடைந்தனர். துக்க சாகரத்தில் அமிழ்ந்திருக்கும் அவர்கள் குடும்பத்தினருக்குக் கடவுள் ஆறுதலையும், சகாயங்களையும் அளிப்பாராகவும் என்று ஸ்ரீமான் சி. நாராயண நாடார் எழுதுகிறார்.

---

### தேவை.

விருதுநகருக்கு அருகாமையான கோப்பிநாயக்கன்பட்டி "வள்ளியப்ப நாடார், க்ஷத்திரிய வித்தியாசாலை" க்கு ஓர் ஹையர் கிரேடு படித்த உபாத்தியாயர் தேவையா யிருப்பதால், வேலை வேண்டியவர்கள் தங்கள் யோக்யதா பத்திரங்களை நேரில் காட்டி வேலையை ஒப்புக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நா. க. வ. காளியப்ப நாடார்,
நா. க. வ. மாரியப்ப நாடார்,
மானேஜர்கள்.

---

சூரியனை மேனோக்கி சுணங்கன் குரைப்பது போன்றே
சீரியரைக் கீழ் மக்கள் சீறுவது.

---

## செய்தித் திரட்டு.

கல்கத்தாவில் எம். எஸ். எம். ரயில்வே சரங்க இலாகா இஞ்ஜினியர் ஆஸ்வால்டு மின்டோ என்பவர் ஏ. எச். கிளேர்க் என்பவரின் நாயைத் திருடிவிட்டதாக பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டின் முன் வழக்கு தொடரப்பட்டு நாளது டிசம்பர் ௴ 7ந் தேதிக்கு வாயுதா போடப்பட்டிருக்கிறது.

* * *

டக்காவுக்கு சமீபத்திலுள்ள நாராயண காஞ்சியில் எம். டேவிட் கம்பெனியாரின் சணல் கிடங்கொன்றில் தீப்பற்றி 80 ஆயிரம் ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டது.

* * *

சியம்நாட்டில், ஒருவன் தன் கூடப் பிறந்த சகோதரியைக் கலியாணம் செய்துகொள்ளலாமென்று ஒரு புதிய சட்டம் ஏற்பட்டிருக்கிறதாம். விந்தைதான்!

* * *

அலகாபாத்தில் இரு வெள்ளைய ஸோல்ஜர்கள் ஒரு நகை வியாபாரி கடையில் சில நகைகளைத் திருடிவிட்டார்கள். விசாரணையின்போது மாஜிஸ்ட்ரேட்டிடம் தமக்கு சம்பளம் போதாததால் திருடினதாகக் கூறினார்களாம். மாஜிஸ்ட்ரேட் 3 மாத கடுங்காவல் தண்டனை விதித்தார்.

* * *

தூத்துக்குடியில் முத்துச்சிலாப ஆரம்ப தினமுதல் சராசரி தினமொன்றுக்கு சர்க்கார் பகுதிக்கு ரூ 1000 கிடைப்பதாகத் தெரிகிறது.

* * *

ஒரு போலீஸ் சப் இன்ஸ்பெக்டரும், ஒரு டெபேதாரும் கூடி ஒரு பெண்ணை மானபங்கம் செய்ததாக கல்கத்தா ஹைக்கோர்ட்டில் தொடுக்கப்பட்ட வழக்கில், முந்தியவருக்கு 7-வருஷக் கடுங்காவலும் ரூ 1000 அபாரதமும், பிந்தியவருக்கு 3 வருடக் கடுங்காவலும் ரூ 1000 அபாரதமும் தண்டனை விதிக்கப்பட்டது.

* * *

அமெரிக்காவில், நியு இங்கிலாந்து என்ற விடத்தில் வெள்ளச்சேதத்தால் 600,0000 பவுன் நஷ்டமாம்.

* * *

மாஜி கெய்ஸரின் சகோதரி பிரான்ஸஸ் மேரிக்கும் ஸ்ப்னுபுக் என்பவருக்கும் அரண்மனையில் வைதீக முறைப்படி விவாகம் நடந்தேறியதாம்.

* * *

பெங்களூர் ஸிட்டி கெம்பாபதி ஏரியில் நடந்த ஸ்திரீ கோஷ்டி நீந்தல் போட்டியில் நீண்ட தூரம் நீந்ினதில் ஸ்ரீமதிநாஸம்மாள் முதற்பரிசும், ஸ்ரீமதி சாவித்திரி 2-வது பரிசும், வேகமாய் நீந்துவதில் ஷை நாஸம்மாள் முதற்பரிசும் ஸ்ரீமதி கிருஷ்ணம்மாள் 2-வது பரிசும் கிடைக்கப்பெற்றனர்.

* * *

கும்பகோணத்தில், கும்பேஸ்வர கோயில் விக்கிரகத்தில் நகை திருடியதாக ராமச்சந்திரன் என்னும் பிராமண வாலிபன் பேரில் தொடரப்பட்ட வழக்கில் சப்மாஜிஸ்ட்ரேட் ராமச்சந்திரன் பேரில் குற்றப்பத்திரிகை படித்துவிட்டார்.

* * *

லண்டனில் "காமன் வெல்த் ஆப் இந்தியா லீக்"கின் ஆதரவில் கூடிய ஒரு பொதுக்கூட்டத்தில் மிஸ். மேயோவின் "இந்தியமாதா" வென்னும் புஸ்தகம் பலமாகக் கண்டிக்கப்பட்டிருக்கிறது.

* * *

ஐரோப்பாவில் தற்போது 35 லட்சத்து 52 ஆயிரம் திருப்புகளிருக்கின்றனவாம்.

* * *

யுத்தமந்திரி இந்தியாவுக்கு வருவதைப் பற்றி லண்டன் லார்டு சபையில் பல அங்கத்தினர்கள் கண்டித்துப் பேசியிருக்கிறார்கள்.

* * *

சேலம் ஜில்லாவில் இராமநாதபுரம் என்னும் கிராமத்தில் பெருமாள் என்னும் ஆதித்திராவிடன் தன் மாட்டுப் பட்டியில் திருடவந்த ஒருவனைப் பிடித்துவிட்ட தீரத்திற்காக ஓர் நிலம் பரிசளிக்க வேண்டுமென்று ஜில்லாக் கலெக்டருக்கு போலீஸ் சூப்பிரண்டென்டென்ட் சிபார்சு செய்திருக்கிறார்.

* * *

ஸர். ராஜகோபாலாச்சாரியாரவர்கள் பெங்களூரில் 30—11—27 இரவு தேகவியோகமானார். அன்னவர் பிரேதம் நாளது டிசம்பர் ௴ 1௳ இரவு அவருடைய குமாரர்கள், டாக்டர் பாண்டலேய், மற்றும் பெங்களூர் பிரமுகர்கள் அனைவரும் சூழ இந்துக் கிரியைப்படி தகனம் செய்யப்பட்டது.

* * *

உடைப்பிரமைக்குப் பேர்போன பாரீஸில் இப்போது ரப்பர்சட்டைகள் தோன்றியிருக்கின்றன.

* * *

சென்ற ஐந்தாண்டுகளுக்குள்ளாக அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில் மோட்டார் விபத்துகளால் 144,876-பேர் இறந்திருக்கின்றனர்.

* * *

ஒலிம்பியாவில் மோட்டார் கண்காட்சி நடந்த சமயத்து ஒரு பெண் மோட்டார் ஒன்றைத் திருடி ஓட்டிக் கொண்டுபோய், வழியில்லாமல் விட்டுவிட்டு, பின் தொடர்ந்த போலீஸாரையும் ஏமாற்றி ஓடிவிட்டாள்.

* * *

சென்னையில் நடக்கப்போகும் பத்திராசிரியர் மகாநாட்டில் ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட வேண்டிய விஷயங்களை யோசித்து முடிவு செய்துகொள்ள ஸ்ரீமான்களான, ஏ. ரங்கசாமி ஐங்கார், ஏ. ராமசாமி முதலியார், கே. பி. விஸ்வநாத ஐயர், ஜி. வி. கிருபாநிதி, ஆர். கணேசய்யர், சேஷகிரி ராவ், மந்தரேஸ்வர சர்மா முதலியோர்களடங்கிய ஒரு தனிக்கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது.

* * *

ஆஸ்திரேலியாவில் டிரான்ஸ் ஆஸ்திரேலியன் ரயில் பாதை ஒரு வளைவுமின்றி 330 மைல் போகிறதாம்.

* * *

ஒரு மாதத்திற்கு முன்னர் கொச்சிக்கடுத்த சேரை யென்னுமிடத்து அரிசி மூட்டைகள் ஏற்றிச் சென்ற ஒரு சிறு கப்பலை 94 அடி நீளமும், 60 அடி அகலமுமுள்ள ஒரு திமிங்கலம் கவிழ்க்க வரும்போது கப்பலோட்டி சுட்டுக் கொன்று கரைக்கிழுத்து வந்துவிட்டார்.

* * *

பாட்னா ஜில்லாவில 15 வயதுள்ள ஒரு பிராமணப் பெண் தன் புருஷன் இறந்ததும், யார் தடுத்தும் கேளாது உடன்கட்டையேறினள். தேகமெல்லாம் தீயால் வெந்து புண்ணாக சகிக்க முடியாது கங்கையில் குதித்துவிட்டாள். பின்னர் கரையேற்றப்பட்டு 2 நாளில் உயிர் நீத்தனள். இம்மாதின் கற்பு மகிமையை எம்மட்டும் புகழப்பொருந்தும்!

* * *

லக்ஷ்மணபுரியில் நடைபெற்ற 5 மைல் நடக்கும் பந்தயத்திலும் 8 மைல் நடக்கும் பந்தயத்திலும் பன்வேஷாரி முகஜீ யென்பவர் முதற் பரிசுபெற்றார். இவர் 5 மைலை 42 நிமிஷத்திலும் 8-மைலை, 1 மணி 2 நிமிஷத்திலும் கடந்தார்.

* * *

டாக்டர் பெஸண்டம்மையார் கள்ளிக்கோட்டைக்குச் சென்றிருந்தபோது அவருக்கு இந்தியன் ஸ்திரீகள் சங்கத்தார் வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தனராம்.

* * *

சென்னையில் ஓர் ஆஸ்பத்திரியில் ஒரு பெண்ணுக்கு மிக ஆச்சரியமுள்ள ஒரு ஆண் மகவு பிறந்ததாம். அக்குழந்தைக்கு இரண்டு தலைகளும், நான்கு கண்களும். இரண்டு காதுகளும், இரண்டு கால்களுமிருந்தனவாம். குழந்தை இறந்துவிட்டதாம்.

* * *

புதுப்பாளையத்தில் ஒரு ஸ்திரீ தனது 7 வயதும் 1½ வயதுமுள்ள இரண்டு ஆண் குழந்தைகளை கிணற்றில் தள்ளிவிட்டு தானும் கிணற்றில் விழுந்துவிட்டாள். அந்த ஸ்திரீ மட்டும்உயிர் பிழைத்தனள். குழந்தைகள் இறந்துவிட்டன. அந்த ஸ்திரீயை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கொலை, தற்கொலை முயற்சி ஆகிய இரண்டு குற்றங்களுக்கும் சார்ஜ் செய்திருக்கிறாராம்.

* * *

பிரிட்டிஷ் ராணுவ காப்டன்களான சார்லஸ் ஆலிகரும், ஜியேகாப்டன் ப்ரிபாலின்ஸும் மோட்டார் ஸைக்கிளில் முதல் உலகயாத்திரையைமுடித்துவிட்டு இங்கிலாண்டுக்குத் திரும்பிவிட்டனர். யாதொரு விபத்தின்றியும் 5 கண்டங்களிலும் 22800 மைல்தூரம் பிரயாணம் செய்திருக்கின்றனர்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## ஆணும் பெண்ணும்

கவி ரவீந்த்ரநாத் தாகூர் எழுதிய ஒரு கட்டுரையின் சாராம்சம் வருமாறு:—

ஆணுடன் போட்டியிடுதல் பெண்ணின். இயற்கையன்று. ஆணின் குறைகளைப் பூர்த்திசெய்தல் பெண்ணுக்கேற்பட்ட கடன். ஆதலின் வாழ்வுத்துறையில் ஆணுடன் போட்டியிட்டுப் பொருள் சேகரிக்க முயலுதல் பெண்ணுக்கு நலந்தருவதாகாது.

வாழ்க்கை என்னும் பிரயாணத்தில் பெண் ஆணின் துணையாயிருக்கிறாள் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் ஒருவனுக்குத் துணை செய்வதெனில் அவன் செய்வதைப்போல் நாமும் செய்வதன்று. வாழ்க்கையில் பெண்ணுக்கும் ஆணுக்கும் ஏற்பட்ட கடமைகள் ஒன்றாகவே யிருப்பின் வாழ்க்கை ஒரு பெரிய சுமையாயிருக்கும்.

மனோலோகத்தில் ஆண் மகன் படைப்புச் சக்திபெற வேண்டுமாயின் பெண்ணின் தூண்டுதல் இன்றியமையாதது. சிந்தனைத் துறையிலும் பாரமார்த்திகத் துறையிலும் பெண்ணின் உதவி எவ்வளவு உண்டென்பதை நாம் நன்குணராத காரணமே அவள் அத்துறைகளில் பின்னணியில் நின்று வேலை செய்வதாகும்.

ஆணுக்கு அவன் வாழ்க்கைத் துணைவியாம் பெண்ணைவிட நடமாடுவதற்கு அதிக இடமும் சுதந்திரமும் தேவை. பெண்ணுக்கு ஆணைவிட ஒருமைச் சிந்தனையும் பெண்மை முதிர்ந்து கனிவதும் அன்பினாலும் பிரியத்தினாலுமேயாம்.

புத்தர் நித்தியப் பொருளைத் தேடுவதற்காகத் தமது மனைவி கோபாவை விட்டுப்பிரிந்து சென்றார். இஃது ஆணின் இயல்புக்கு ஒத்தது; ஆணுக்கே சாத்தியமாவது. அதே நோக்கத்தின் பொருட்டு கோபாவினால் புத்தரைக் கைவிட்டிருக்க முடியாது. அவள் பெண் என்பதே காரணம்.

அன்பு ஆண்மகனுக்கு முக்கியமான தன்றென நான் சொல்லவில்லை. உதாரணமாக புத்தர் கோபாவைக் காதலித்திருந்தாலும் காதலித்திராவிடினும் அவருக்கு ஒன்று தான் என்று நான் நம்பவில்லை. புத்தரின் வளர்ச்சிக்கு அன்பு அவசியமாயிருந்தது. ஆனால் அவருக்கு அன்பே எல்லாமாயில்லை. அவருக்கு ஒரு பெருந் துணையாக மட்டுமே யிருந்தது. ஆனால் கோபாவின் அன்பு இத்தகையதன்று. அவளுக்கு அவ்வன்பே சகலமும். அதையன்றி வேறொன்றுமே யில்லை. அன்பு பெண் அமைப்பின் முதுகெலும்பாகும். ஆணுக்கு அது வழிகாட்டும் ஓர் ஒளியேயாகும்.

பெண் ஆணுக்காகத் தியாகம் செய்யக்கூடிய அளவு ஆணினால் பெண்ணுக்காகத் தியாகம் செய்ய முடியாது. பெண் உண்மையாக அன்பு செய்யும்போது அவ்வன்பின் வலிமை எல்லை கடந்ததாகிறது. அவ்வேளையில் அவள் தன் அன்பனுக்காகச் செய்யக்கூடாத காரியம் ஒன்றுமே யில்லை.

ஆண்மகன் தன் அன்பின் பொருட்டு வாழ்க்கையில் மற்ற வேலைகளையெல்லாம் விட்டுவிட வேண்டி வந்தாயின், கொஞ்ச நாளில் அவன் அதிருப்தியடைதல் அநேகமாக நிச்சயம். ஒருத்தியின் காதல் காரணமாய் வாழ்க்கையின் மற்றக் கடமைகள், பொறுப்புகள் எல்லாவற்றையும் விட்டவன், அது குறித்து பின்னர் எப்போதுமே வருந்தாதிருப்பானாயின் அவனைப் பெண்ணியல்புள்ள ஆண் என்றே நான் கூறுவேன்.

எப்போதும் தேடி அலைதல் ஆணின் இயற்கை. கடவுளையோ, மோட்சத்தையோ தேடினாலும் சரி, வேறு உலகப் பொருளைத் தேடினாலும் சரி, வாழ்க்கையில் அவன் தொழில் தேடுவதே யாகும். வாழ்க்கை அநுபவம் எதுவும் அஃது எவ்வளவு பெரிதாயினும் அவனுடைய வேகத்தைத் தடை செய்யுமாயின் அவன் வாழ்வு நோக்கம் பூர்த்தியாகாது. அன்பு அவனுக்கு மகோன்னதமான ஓர் அநுபவமாயிருக்கலாம்; அவன் பாதையில் ஒரு சிறந்த ஒளியாயிருக்கலாம். அவ்வளவு தான்; அதற்குமேலில்லை.

மனிதன் மரத்துக்கு ஒப்பானவன். மரத்துக்கு வளர இடம்வேண்டும்; காற்றுவேண்டும்; மழைவேண்டும்; வெளிச்சம் வேண்டும். ஆனால் அதன் வேர்களைப் பறிக்க முயன்றால் மரம் துடிதுடியாமலிருக்க முடியாது. பெண் கொடியைப் போன்றவள். கொடி மரத்தைத் தழுவிக் கொண்டே வளர்ந்து செழித்து விடுகின்றது.

ஆண்மக்கள் பலரின் வாழ்க்கை பாழாவதற்கு இது தான் காரணம். அவர்கள் அன்பு ஒன்றே தங்களுக்குப் போதுமென நினைத்து மற்ற எல்லாவற்றையும் கைவிட்டு விடுகிறார்கள். ஆனால் துரதிஷ்டவசமாக, பெண்கள் விஷயத்தில் மட்டும் இஃது உண்மையே யன்றி ஆண்கள் விஷயத்தில் உண்மையன்று. ஆதலின் அத்தகைய ஆண்மக்கள் பின்னால் துன்புறுகிறார்கள்.

ஆண்மகன் ஒருவனை அவன் காதலிக்கும் பெண் தனக்காக மற்ற எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டுமென்று கேட்கும்போது அவனால் கொடுக்க முடியாத விலையைக் கேட்பவளாகிறாள். காரணம் அவன் ஆண் என்பதேயாகும்.

பெண்ணின் அன்பு இவ்வாறன்று. அது சிறிதும் சுயநலக்கலப்பற்றது; மற்ற எல்லாவற்றையும் பலிகொடுக்கத் தயங்காதது. ஆனால் அவளும் அன்பினால் மட்டும் ஆன்ம திருப்தியடைவதில்லை. பெண்மை தாய்மையிலேயே பூர்த்தி பெறுகின்றது. பெண் தாயாகும் போதே அவள் ஆன்மத் திருப்தி பெறுகிறாள்.

"நவசக்தி".

## சுயமரியாதைஎழுச்சி.

### குற்றாலம் நாடார்களின் வெற்றி.

28-11-27 ல் மாயவரம் தாலுக்கா, குற்றாலத்தில் சோளீஸ்வர சுவாமிக்கு கார்த்திகை சோமவார அபிஷேக ஆராதனை ஸ்ரீமான் மாரிமுத்து நாடார் அவர்களால் நெடுநாளாய் நடைபெற்று வந்ததைப் பொறுத்து இவ்வருஷம் கோவில் பஞ்சாயத்துப்பிள்ளை அவர்களும் இரண்டு குருக்கள் மாரும் திரு. நாடார் வீட்டிற்குச் சென்று தாங்கள் கொண்டுவந்த புஷ்பமாலையை திரு. நாடார் கழுத்தில் சூட்டினார்கள். ஸ்ரீமான் நாடார் பக்திவணக்கத்துடன் பெற்றுக்கொண்டார். திரு. பிள்ளை அவர்கள் இவ்வருஷம் மிகவரிசையாகச் செய்யவேண்டும் என்று அன்பு பாராட்டி திரு. நாடாரிடத்தில் சொல்லும் தருவாயில் நாடார் சங்கவாலிபர்கள் ஒன்று கூடி திரு. பிள்ளை இடத்தில் சொன்னதாவது:—யாங்கள் ஆலயத்திற்குள் வந்து தெரிசிக்கக் கூடாது என்று நினைக்கும் சுவாமி யாங்கள் செய்யும் அபிஷேக ஆராதனைகளை ஒப்புக்கொள்ள நியதி யுண்டோ? என்றனர். அது சமயம் பெருந்தகையாளராகிய திரு. பஞ்சாயத்து நடேசபிள்ளை அவர்கள் வாலிபர்களை நோக்கி "ஆலயத்திற்குள் யாவரும் பொதுவாய் தெரிசிக்கும் இடத்தில் தாங்களும் வந்து தெரிசிக்க உரிமையுண்"டென சொல்லினர். அவ்விதமே அன்று தான் சொன்ன வாக்கு தவறாமல் தானும் இருந்து யாவரும் பொதுவாய் தெரிசிக்கும் இடங்களெல்லாம் சமரசமாய் நாடார்கள் பலருடன் தெரிசித்த பிறகு விபூதிப்பிரசாதம் முதலியன வழங்கியது போற்றக்கூடியதே. பின் யாவர்களும் களிப்புற்ற மனத்துடன் சென்றார்கள். இத்தகையார்க் கல்லவோ மண்ணுலகும் விண்ணுலகும் பெருமையை அளிக்கும். மாரிமுத்துநாடார், சீனிநாடார், நமசிவாய நாடார்,கு. முத்துக்குமரநாடார், கிட்டு நாடார், சின்னைய நாடார், கருப்பையாநாடார், சோணமுத்து நாடார், ஜெகநாதநாடார், இன்னும் அனேகரும், ஸ்ரீமதி மூவலூர் ராமாமிர்தம்மாள், நாகரத்தினம்மாள், ஸ்ரீமான்கள் சிவவடிவேல்பிள்ளை, சுந்தரம் நாயுடு, கௌரிசங் பிள்ளை, ப. ரெத்தினநாடார் அவர்களும் மற்றும் உள்ள பிராமணர்களும் அன்றைய வைபவத்தில் கலந்துகொண்டனர்.

ஜெகநாத நாடார்.

## ஸத்திய தரிசனம்.

### மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

பாகம் 4. அத்தியாயம் 26.

#### சத்தியாக்கிரகத்தின் தோற்றம்.

ஜோஹன்ஸ் பர்க்கில் நடந்து வந்த விஷயங்களெல்லாம் என்னையே நான் சுயபரிசுத்தம் செய்து கொள்ளக்கூடிய விதத்தில் நடைபெற்று வந்தபடியால் அதுவே சத்தியாக்கிரகத்துக்கு அஸ்திவாரமாக இருந்து வந்தது. என் வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்களெல்லாம் என்னை இரகசியமாகவே பிரமசரியத்தின் உன்னத ஸ்தானத்தில் கொண்டுபோய் விடவே தயார் செய்து வந்தன வென்று இப்போது நான் அறிகிறேன்.

சத்தியாக்கிரகம் என்னும் பெயர் கண்டுபிடிப்பதற்கு முன்னரே அந்த சத்தியாக்கிரகக் கொள்கை மட்டும் தோன்றி விட்டது. அத்தகைய கொள்கை ஒன்று தோன்றியபோது அது என்னவென்று என்னாலேயே அறிய முடியவில்லை. குஜராத்தி பாஷையில் நாங்கள் இந்தக் கொள்கையைப்பற்றி விவரித்துக் கூறும்போதும் சாத்வீக எதிர்ப்பு என்பதற்குரிய ஆங்கில பதத்தையே உபயோகித்துவந்தோம். ஆனால் நான் ஐரோப்பியர்களுடைய கூட்ட மொன்றில், சாத்வீக எதிர்ப்பு என்பது மிகவும் குறுகிய நோக்கத்துடன் ஏற்படுவதென்றும், பலஹீனர்களே அத்தகைய உபாயத்தைக் கைக்கொள்வார்களென்றும், அது விரோதத்தினாலேயே விளைவதென்றும், இறுதியில் அக்கொள்கை பலாத்காரத்தில் கொண்டு போய்ச் சேர்த்துவிடுமென்றும் அறிந்த போது அதைப்பற்றிச்சந்தேகங்கொண்டு சிறிது தயங்கினேன். பின்னர் நான் இந்திய இயக்கத்தைப்பற்றி விஸ்தாரமாக வியாக்கியானம் செய்தேன். இந்தியர்களுடைய போராட்டத்தை இன்னதென்று குறிக்கக்கூடிய ஒரு பதத்தை உற்பத்தி செய்யவேண்டியது இந்தியர்களுக்கு அவசியமாயிருந்ததென்பது நன்கு புலனாகின்றது.

ஆனால் நான் அனுஷ்டித்து வந்த என் வாழ்க்கையின் முறைக்கே ஒரு பெயரைக் கண்டு பிடிக்க முடியாமல் அவஸ்தைப்பட்டேன். எனவே இத்தகைய வாழ்க்கைக்குரிய ஒரு பெயரைக் கண்டு பிடிப்பவருக்கு ஏதேனும் பரிசு அளிப்பதாக "இந்தியன் ஒப்பினியன்" என்னும் பத்திரிகையில் வெளியிட்டேன். அவ்வாறு செய்ததன் பயனாக மகன்லால் காந்தி உண்மையும் உறுதியும் என்று பொருள் தரக்கூடிய 'சடகிரகா' என்னும் பதத்தைத் தோற்றுவித்து என்னால் அளிக்கப்பட்ட பரிசையும் பெற்றார். ஆனால் அதை இன்னும் நன்றாக விளங்குவதற்காக நான் "சத்தியாக்கிரகா" என்று மாற்றினேன். அது முதல் அப்போராட்டத்துக்குரிய பெயராக குஜராத்தி பாஷையில் சத்தியாக்கிரகா என்பதே வழங்கப்பட்டு வருகின்றது.

இப்போராட்டத்தின் விவரம் முழுதும் தென்னாப்பிரிக்காவில் நான் அனுஷ்டித்த என் வாழ்க்கையின் விவரமாகவே இருக்கிறதுடன் சிறப்பாக அந்நாட்டில் நான் உண்மையை அறிவதற்காக அனுபவித்த என் வாழ்க்கையின் தத்துவங்களை சத்தியாக்கிரகப் போராக இருக்கின்றது. இந்த சரித்திரத்தின் பெரும் பாகத்தை நான் எரவாடா சிறையில் இருந்தபோது எழுதிக்கொண்டேவந்து நான் விடுதலை பெற்றபோது அதை முடித்தும் விட்டேன். அது 'நவஜீவன்' பத்திரிகையில் வெளியாக்கப்பட்டுப் பின்னர் புஸ்தக ரூபமாக அச்சிடப்பட்டது. அதை ஸ்ரீஜுத் வால்ஜி கோவிந்தஜீ 'கரெண்ட் தாட்' என்னும் பத்திரிகைக்காக ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வருகிறார். ஆனால் நான் இப்போது அதை ஆங்கிலத்தில் புஸ்தக ரூபமாகவே வெளியாக்குவதற்கு வேண்டிய முயற்சிகளையும் செய்துவருகிறேன். ஏனெனின் தென்னாப்பிரிக்காவில் நான் கண்ட பல முக்கியமான அனுபவங்களை அறிய விரும்புவோர் சௌகரியமாக அறிந்து கொள்வதற்காகவேயாகும். குஜராத்தி பாஷையில் வெளியாயிருக்கும் புஸ்தகத்தை இதுவரை பார்த்திராத குஜராத்தியரை என் சத்தியாக்கிரக வாழ்வைப் பற்றிய அந்த சரித்திரத்தை ஒருமுறை வாசிக்கும்படி நான் யோசனை கூறுகின்றேன். எனவே, நான் அந்த வெளியீட்டில் குறிப்பிட்டு விட்டவைகளைப்பற்றி மீண்டுமொரு முறை இப்போது எழுதப் போவதில்லை. ஆனால் அடுத்த அத்தியாயங்களில் தென்னாப்பிரிக்காவில் என் வாழ்க்கையில் ஏற்பட்ட பல சம்பவங்களைமட்டும், அதுவும் அந்த சரித்திரத்தில் கூறத் தவறிவிட்டவைகளை மட்டும், எழுத உத்தேசித்திருக்கின்றேன். அவைகளை எழுதி முடித்ததும் நான் இந்தியாவில் பெற்ற சில அனுபவங்களை யெல்லாம் வரிசைக்கிரமப்படி சேகரித்து வைத்து படிக்க விரும்புவோர், தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரகப் போராட்டத்தின் சரித்திரத்தையும் வாங்கி வைத்துக் கொள்வது நலமாகும்.

## "சகோதர ஊழியச் சங்க" ஸ்தாபனம், அருப்புக்கோட்டை.

1927ம் ஞு நவம்பர் மீ 20உ ஞாயிற்றுக்கிழமை இரவு 8-மணிக்கு இந்நகர் டாக்டர். பாண்டியன் "பாலரத்தின மெடிக்கல் ஹா"லில் ஸ்ரீமான் ஆர். ஸ்ரீநிவாசுலு அவர்கள் தலைமையின் கீழ் கூட்டம் கூடியது. அபிமானிகள் பலர் விஜயம்செய்திருந்தனர். அக்கிராசனர் முன்னுரை கூறியதும் சங்கத்தின் சட்டதிட்டங்கள் வாசிக்கப்பெற்றன. பின்னர் பலர் அங்கத்தினராகச் சேர்ந்ததும் உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்கள்.

ஸ்ரீமான் K. பாண்டியன் — பிரஸிடெண்டு.
,, தி. கருப்பையா பிள்ளை — காரியதரிசி.
,, ரா. உ. மல்லையா — பொக்கிஷதார்.

நிர்வாகக்கமிட்டி.

ஸ்ரீமான் R. ஸ்ரீநிவாசுலு
,, S. ரத்தினவேலு பிள்ளை
,, P. சுப்பிரமணியம்
,, T. V. வேங்கிடசாமி நாயுடு

நிர்வாகக்கமிட்டி மெம்பர்களும், முறையே பிரேரிக்க ஆமோதிக்கப் பெற்று ஏகமனதாய் தேர்ந்தெடுக்கப் பட்டனர். பிறகு அக்கிராசனர் முடிவுரையில் கதர், மதுவிலக்கு, கல்வி, கிராம நிர்மாண வேலைகளைப்பற்றிப் பேசினர். ஸ்ரீமான் தி. கருப்பையா பிள்ளை வந்தனோபசாரம்கூறியதும் இரவு 10½ மணிக்கு சபை இனிது கலைந்ததென காரியதரிசி எழுதுகிறார்.

## "கள்ளிகுளம் பால்ய நாடார் சங்கம்", கொழும்பு.

ஷை சங்கம் 5-வது வருட 7-வது மாதாந்தக் கூட்டம் சென்ற 13-11-27ல் இரவு 9–30 மணிக்கு உணுப்பெட்டி 5–ம் நிர் கட்டடத்தில் ஸ்ரீமான் வ. ம. விசேந்திர நாடாரவர்களின் தலைமையின் கீழ் நடந்தேறியது. அவ்வமயம் அங்கு மிக திரளான ஜனங்கள் விஜயம் செய்திருந்தனர்.

ஸ்ரீமான் அ. ச. கு. இருதய நாடாரவர்களால் கடவுள் வணக்கம் பாடப் பட்டதும், தலைவரவர்கள் முகவுரையாக பாண்டிய வம்சத்திலுதித்த நாடாரவர்களாகிய நம்முடைய தற்கால நிலையைப் பற்றி எடுத்தோதினர். பின் ஸ்ரீமான் வி. மி. செயநாத நாடார் சங்க விளக்கம் என்பதை ஒவ்வொருவருடைய மனதிலும் ஆழமாய் வேரூன்றிப் பதியுமாறு எடுத்துரைத்தனர். வழக்கப்படி காரியதரிசியால் வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டதும் தலைவர் முடிவுரை கூறி, வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்ததென கௌரவ பொக்கிஷதார் ஸ்ரீ வி. மி. யே. எழுதுகிறார்.

சத்தியாக் கிரகமே சதமென்றிருப்போர்—கொடுங்
கத்தியாக்கிரகம் கனவிலுங் கருதார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



(2-ம் பக்கத்தின் தொடர்பு.)

என்னும் இச்சுலோகத்தால் அந்த ஆயுதத் தொழிலும் அரசருக்குரிய தென வற்புறுத்தப்பட்டது. அத்தொழிலேயே நமது ஏனுதிநாத நாயனுரும், அவர் குலத்தவர்களும் செய்து வந்தனர்கள். வயிற்று ஜீவனுர்த்தத்தின் பொருட்டு நீலமேக முதலியார் மர மேறினதைப் போல, ஏனுதிநாத நாயனுர் வம்ஸத்தவர்களும் அவ்வாயுதத் தொழிலே ஜீவனுர்த்தத்தின் பொருட்டு செய்து வந்த தல்ல. அவ்வாயுதத் தொழில் சன்ருர் குலத்தவர்களுக்குச் சாதித் தொழிலாகும்.

உபமன்னிய பக்த விலாசம்,

ஏனுதிநாத நாயனுர் சரிதம்,

6-வது சுலோகம்.

"குலக்ரம ஸமுத் பந்ந வ்ருத்தி
ஹாத்யாயுத ஸரமே,
ஏநாதிநாத மாசார்யந்
நஸேஹே பௌருஷேணஸ்"

என்னுஞ் சுலோகத்தால் விளங்கும். "ஸ:—அந்த (ஏனுதிநாத நாயனுர் வம்ஸத்தவர்களுக்கு) குலக்ரமம்—வடைஸ பரம்பரையாக, உத்பந்ந—பிறந்திருக்கும், வ்ருத்தி—தொழில்" என்னும் பொருள்களேயுங் கவனிப்பரேல், அவ்வாயுதத் தொழிலும் சான்ருர் சாதியாருக்கு சாதித் தொழி லென வறிவர். "தள்ளாத தங்கள் தொழி லுரிமைத் தாயத்தின்" எனவும், "தங்கள் குலத் தாயத்தின் ஆனுத செய் தொழில்" எனவும், "மறப்படைவாட் சுற்றத்தார்" எனவும், "நங் தமது வாட்பயிற்றும் நற்ருயம்" எனவும் கூறிய பெரிய புராணம், ஏனுதிநாத நாயனுர் புராணம் 5, 7, 12, 13-வது செய்யுட்களே அதனேடு சேர்த்து கவனிப்பரேல் அவரது அறிவின் தன்மை விளங்கிவிடும். இப்பகுதிகளுக்கு முன் சாட்சி, சான்ருர் என்னும் சொற்கள் மர மேறி சாட்சி சொல்லுதலால் ஏற்பட்டதெனக் கூறிய அவரது வாக்கு எங்கனே கனம் பெறும். நூற் பிரமாண மிலாத அவரது ஆகாயக் கோட்டை இவைகளுக்கு முன் செல்லா தென வறிந்தடங்குவாராக. விரிக்கிற் பெருகுமென விடுத்தாம்.

ஆட மாட்டாதவன் இடம் பத்தாது என்பதைப்போல், நாடார் ஆராய்ச்சியையும் இதோடு இழுத்துக் கொண்டார். நாடார் என்பது ஒரு சாதிப் பட்டப் பெயர். சாதிப் பெயர்களெல்லாம் தொழிற் பெயரடியாகவும், பொருட் பெயரடியாகவும் பிறத்தல் வழக்கு. நாடார் என்பது பொரு ளடியாகப் பிறந்தது. இரண்டாம் வேற்றுமைத் தொகை. உடைமைப் பொருளில் நின்று, நாட்டை யுடையவர் என்னும் பொருளேக் கொள்ளும். இப்பொருள் தான் மேற் கூறிய அரசர் என்னும் சாதிப் பெயருக்கும், ஆயுதத் தொழிலென்னுங் குலத் தொழிலுக்கும் ஒத்த பொருள். இப்பொருளே விட்டு "கள்ளே நாடாததால்" நாடார் எனப்பட்டனராம். என்ன விந்தை! பயிர்த் தொழிலே யுடையவருக்கு வேளாளர் என்பது சாதிப் பெயர். அப்பயிர் "வேளாண்மை" என்னும் பகுதியில் தொக்கி நிற்கிறது. அதைப்போல் நாடார் என்னும் பதத்தில் கள்ளே நாடாதவர் என வறிய "கள்" சப்தம் தொக்கி நிற்க வேண்டும். இல்லேயே! வீண் குதர்க்கம் பேசி காலத்தைப் போக்குவது பயனின்மையாம். எப்பொழுதும் சாதிப் பெயர்கள் எதிர் மறைப் பொருளேக் கொள்ளாது. அதோடு வினையாலணையும் பெயராகவும் நிற்காது. இதன் உண்மையை நாடார் என்னுஞ் சொல்லாராய்ச்சியிலும், எமக்கு நேரில் எழுதியும் தெரிந்து கொள்ளலாம். இது நிற்க,

பத்திராதிபர்கள் இவ்வித அற்ப வியாசங்களுக்கு இடங் கொடுத்து ஒரு கூட்டத்தவரை வீணே புண்படுத்துவது நியாய மின்மை யென வறிவார்களாக. இச்சாதியின் உண்மையை தெரிந்து கொள்ள விரும்புவரேல், எமக்கும் பத்திரிகையில் இடங் கொடுத்து, தூஷணையின்றி, நூலாதரவோடு வாதிக்க முன் வரலாம். சுபம்.

த. விஜயதுரைச்சாமி கிராமணியார்,
"க்ஷத்திரிய மித்திரன்" பத்திராதிபர்,
தண்டையார்பேட்டை,
சென்னே.

---

## வாலிபர்க்கான போதம்.

பெறற் கரிய மானிடப் பிறவியில் குறிப்பிடப் பாலது வாலிபப் பருவமேயாம். இப்பருவத்தேதான் சடமெடுத்ததின் சாபல்யம் எய்தல் கூடும். எந்த ஒரு பெருங்காரியமும் இது பருவத்தின் போழ்த எளிதல் முடித்தல் ஆகும். இப்பருவ ஸ்பரிசம் கொண்ட எந்த வியக்கமும் வாலிபதிடங்கொள்ளும். இம் மாண்புற்ற பருவங்கொண்ட மக்கள்—வாலிப குழாங்கள் தம்செயலே இனிது வழி கூட்டவே உலகம் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது.

ஒரு சமூகமோ அல்லது தேசமோ அதனதனுடைய வாலிப கோஷ்டியையே பொறுத்து நிலேகொள்ளா நிற்கின்றது. சமூக தேச சேவைக்கு வாலிபர்களே இன்றியமையாதவர். இன்னுர் திறம்பின் எவ்வேலேயும் வேரற்றமரமேயாம்—துவாரங் கொண்ட மாக்கலமேயாம். எப்பொறுப்பும் தங்கள் சுமையாகக்கொண்ட இன்னுரின் திரிகாண திடங்கண்டு சிலேயும் நாணவேண்டுமே! இவர்களின் விரிந்த நோக்கங்கண்டு சாகரமும் சுளிக்கவேண்டுமே! பஞ்சினில் பட்ட செஞ்சுடர் போன்றல்லோ சுறு சுறுப்புடைத்தாராயிருத்தல் வேண்டும்! இம்மிக்க குணங்களெல்லாம் இவர்மாட்டு மிளிர்வுற இம்மக்கள் தக்கவழி சாரல் அவசியம்.

அவ்வழி புகுவான் கருதுகையில் முதன் முதலில் சோம்பல் எனும் ஆம்பல் கொடி கால் பின்னும். சுறுசுறுப்பு அரிவாள் கொண்டறுத்து எறிந்து விட்டால் பின் நடை செய்வதொன்றில்லே. ஆம்பல் அறுத்து நடை கூடுகையில் தம்மகத்தே லக்ஷியங்கள் குறி கொண்டே இயங்கல் செய்துவரவேண்டும்.

தம் தொழிற்றுறையில் ஈடுபட்டு வரும்படித்தே அம்மாட்டுமுள்ள செயல்களில் செவ்வனே நடைகொண்டு திரவியம் திரட்டல் வேண்டும். உத்தம வழியிற் சேர்த்த அவ்வொண் பொருளே உயர்விக்கப் பல சாதனங்களும் கண்டு கண்ணெனக் காப்பாற்றுதல் அவசியம். பொருள் திரட்டுவதெனின், பொழுதுபோக்கு அதனிடத்து மட்டுமே என்றர்த்தங் கொள்ளற்க. இதற்குள் சமூக தேசப் போக்கில் சிந்தை படிந்து விடவேணுமென்பது கருத்து. பரோபகார அருளும் பரிமளித்துக் கொண்டிருக்கவேண்டும்.

அந்தோ! சோதனேகாலம். இந்நிலேயில் ஒரு கேடு சம்பவிக்கக் காத்திருக்கிறது. பாறை எழும்பப்பெற்ற கடலில் அப்பாறையை நோக்கி அதிவேகமாய் ஓடிவரும் கப்பலுக்குச் சமமாகிறோம். ஆபத்து! ஆபத்து!! கப்பலாகிய நமக்கு புத்தி மாலுமி நித்திரையிலிருந்து விட்டால் பாறையில் மோதுண்டு ஆழ்ந்துவிடுவோம். பாறைதானென்ன? பாவைதான்.

பெண்ணின் மின் வெட்டால் பிரமித்துப்போவோம். அதன்பயனுய் கருமம் குறியோம்; காதலே மேற்கொள்வோம்; கடமைப்பாத்திரம் உடைந்துபோம்; கனக அறிவு சிதறிவிடும்; எக்கமும், நோக்கமும் ஏந்திழையின் இச்சைப் போக்கிலேபோம். இத்தகையத்து விளேயும் விபரீதங்கள் வெகுவாம். விரிக்கிலேம்.

இது சமயத்தே மனமெனும் குதிரையை மதியெனும் வாய்வடத்தால் அடக்கி சன்மார்க்கப் பாதையில் ஓட்ட முயற்சித்தல் வேண்டும். குதிரை இடக்குப் பண்ணின் பசியெனும் கசை கொண்டடிக்க. இச்சவுக்கடி பட்ட மாத்திரத்தில் குதிரை ஒழுங்கே ஓட்டத்தில் கூடும்.

இம்மாதிரியே இல்லற வாழ்க்கையில் பிணேப்புறும் மட்டும் இருத்தல் வேண்டும். விதியொத்து விவாகம் ஏற்படுங்காலத்து கோரும் துணேவியின் சீர், குணம் குறித்தேயன்றி பணங்குறித்திருத்தல் கூடாது. நம் கடமைச் சகடுக்கு அச்சாணியன்னவளாயிருத்தல் கவனிக்கப்பாற்று. டாம்பீகம் கருதி விலேயுயர்ந்த பரிமேற்கொள்ளின் அதற்குரிய பரி பக்குவம் போதியதல்லவாயிருக்குங் காலத்து கீழே தள்ளி விடும். விழுந்து காயத்தைக் கண்டு விழிக்க வேண்டியதுதான்.

எனவே, தாரமோர்ந்து சற் புத்திரி சேர்ந்து இல்லற வாழ்க்கையை ரதிமதன சிருங்கார சுகத்துடன் நடத்தி வருக. இங்கு மொரு சோதனே! இதுசமயத்து விபரீத புத்திகளெல்லாம் மேலாடும். சிற்றின்ப நுகரலிலேயே மனம் சென்று விடலாம். தனது வாழ்வின் லக்ஷியம் இத்துடன் முடிவுற்றதெனவும் தோன்றும். ஆகையால் இம்மயக்கத்திற் காளாகாமல் திறலுடன் தெளிவு கொள்ளவேண்டும்.

புத்திர புத்திரிகளேப் பெற்று மகிழ்வோம். அவர்களே பிற்கால வாழ்க்கை நலமேவும் வழிகளில் பயிற்றுதல் செய்தும், இன்னும் குடும்பஅளவில் இயற்ற வேண்டிய கடமை களாற்றி வருதலோடு, ஏற்கனவே குறிகொண்ட குலம் தேச முன்னேற்றங்களேக் கவனிக்கக் கடப்பாடுடையோராதல் வேண்டும். பரோபகார வேலேமேற்கொள்ளவரிந்து கட்டவேண்டும். உண்மைக்கு உயிரையும் ஒரு திரணமாய் உன்னுமல் ஊக்கங் கொள்வது புகழ்ச்சி.

சமூக தேச இயக்கங்களெல்லாம் வாலிபர்களே எதிர்நோக்கியே எழுகின்றன. இவ்வியக்கங்கள் சித்தி பெற வாலிபர்கள்தான் அரும்பாடுகொள்ளல் கூடும். எத்தனேயோ தேசங்கள் வாலிபர்களால் ஒளிர்வுற்று வருகின்றன. தம்மாலியலுதவி புரியவே சடமெடுத்தோ மெனக் கொள்ளவேண்டும். தம் பாற்பட்ட குல, தேச கடமைகளே தம் சுயகுடும்ப காரியங்களேபோல் கவனித்து வரவேண்டும். என்ன எப்படியிருந்தால் நமக்கென்ன வென்றிருத்தல் அசட்டுத்தனம் குறிக்கும்; இது உருப்படுத்தும் குணமன்று.

ஆதலான் வாலிபப் பருவத்துள்ளயாம் அவ்வக்காலத்தில் முன் தோன்றும் அகத்தும் புறத்துமான கடமைகளே யாற்றி தூயசீலர்களாய் விளங்குவோமாக, சுபம்!

ஓர் வாலிபன்.

---

## துண்டுத் துணுக்குகள்.

மோட்டார் டயர்களின் விலே குறைக்கப்பட்டிருக்கிறது.

* * *

ஸநாதனதர்ம மகாநாடு சென்னேயில் டிசம்பர் 3 வது வாரத்தில் நடைபெறும். இதில் சநாதன தர்மிகளே தற்காலம் பாதிக்கும் பல பிரச்சினேகள் கவனிக்கப்பட்டு பிறப்பால் ஹிந்துக்களாக உள்ளவர்களே எல்லாம் சநாதன தர்மத்தின் மூல தத்துவங்களுக்கிணங்க எப்படி ஒற்றுமையாக வாழும்படி செய்வதென்பது பற்றியும் யோசிக்கப்படும்.

* * *

ஸ்ரீமான் சக்லத்வாலா, அரசியல் கமிஷன் நியமனத்தை அங்கீகரித்து இந்தியா சட்டசபை ஒரு தீர்மானம் செய்யும் வரையில் கமிஷன் நியமிக்கப்படவேண்டுவதில்லே என்று பார்லிமெண்டில் ஒரு திருத்தம் கொண்டு வந்து தோல்வியுற்றது.

* * *

காங்கிரஸ் தலேவர் ஸ்ரீமான் ஸ்ரீநிவாச அய்யங்கார், நவம்பர் மீ 24௳ மதுரைக்கு விஜயம் செய்திருக்கிறுர்.

* * *

டாக்டர் பெஸண்டு அம்மையார் நவம்பர் மீ 24௳ திருச்சிக்குச் சென்றனர். அவரை திருச்சி வாசிகள் வரவேற்று உபசரித்தார்களாம். அவ்வமயம் அரசியல் கமிஷனே பகிஷ்கரிக்க வேண்டுமென்றும், தக்கதொரு அரசியல் கமிஷனே நிர்ணயிக்க காங்கிரஸ் மகா சபையை கேட்க வேண்டுமென்பதாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* * *

ஸ்ரீமான் எஸ். கந்தஸாமி நாயுடு, கோவில்பட்டி தாலுகாவிலும், எஸ். கிருஷ்ணராவ் விருத்தாசலம் தாலுகாவிலும் கௌரவப் பஞ்சாயத்து நிர்மாணகர்களாக 2 வருஷ காலத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

* * *

இராமநாதபுரம் தாலுகா போர்டுக்கு ஸ்ரீமான் எம். ராஜம் நாயுடு தலேவராகவும், ஸ்ரீமான் டி. ராமாநுஜ அய்யங்கார் உப தலேவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறுர்கள்.

* * *

ஸ்ரீமான் சாவடி, கே. சுப்பிரமணிய பிள்ளே அவர்கள் திருநெல்வேலி முனிஸிபல் சேர்மனுகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

---

## முத்துப் பதக்கம்.

அழகிய புற்றரைமேல் கவலேயின்றி களிப்புடன் நடந்துகொண்டிருக்கையில் பாதத்தில் சுறுக்கென முட்பாய்ந்தால் எப்படியோ, அப்படியே நமக்கு நன்மதிப்புடையாரிட மிருந்து எதிர் பாரா வசைச் சொல் கிடைப்பது.

* * *

ஒரு காரியத்திலுள்ள பேரவாகாரணமாய் ஆத்திரபுத்தி கொண்டு ஒன்றிழைத்துவிடல் பசுமடுக்கிழித்து பால் கொள்வ தொக்கும்.

* * *

ஒரு ரகசியத்தை முன்பின் யோசியாமல் வெளியிட்டு விட்டு பின் அதை மறைக்கப் பார்ப்பது சுறந்தபாலே மடுக்கொளமுயல்வதாகும்.

* * *

எவ் வெண்ணத்தை நெஞ்சிருத்தி இரவில் நித்திரையிலாழ்கிறேமோ அவ் வெண்ணத்துடனேயே காலேயில் எழுவதியல்பு. இம்மாதிரிதான் இறப்பின் போது எவ்வெண்ணம் நிலே நின்றதோ அவ்வெண்ணத்துடனேயே மறுஜென்மம் தோற்றுகிறதென்பது அறிஞர் கூற்று.

* * *

விருந்தினரின் திருப்தி போஜனத்தைப் பொறுத்ததன்று; செய்யும் உபகாரத்தைப் பொறுத்ததே. விருந்தினர் அனிச்ச மலரினும் அதி மென்மையுடையார். ஏனெனில் அனிச்ச மலர் மோப்பக்குழையும்; விருந்தினர் நோக்கக்குழைவர்.

* * *

இருளுக்குப் பயந்து கிடக்கும் ஒருவன், இருளில் போக முற்படுகிருனெனின் அவன் ஆபத்திலோ, அன்றி ஆத்திரத்திலோ, அல்லது ரகசிய காரியத்திலோ ஈடுபட்டிருக்கின்ருனென யூகித்துக் கொள்ளவேண்டும்.

* * *

ஒவ்வொரு இயற்கைப் பொருளேயும் நுணுக்கமாய்க் கவனிக்கப்புகின் இறைவனின் பெருமை இலங்குகிறது.

* * *

சில படிப்பாளிகள் தமது ஒழுங்கீன எழுத்துக்களால் தம்மைப் பார்க்கிலும் படிப்பில் போந்தாரை சபையில் கீழ்த்தரமாக்கி விடுகிருர்கள்.

* * *

ஒரு காரியம் செய்வதில் எவ்வளவுக்கெவ்வளவு பிரிய மிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அக் காரியத்தின் துரிதத்தைக் காணலாம்.

* * *

ஒரு காரியத்தில் தன் னெண்ணம் பலிதமாகாதெனக் கண்ட ஒருவர் தான் வேணுமென்றே விட்டுக் கொடுத்ததாகப் பாவித்து விலகிக் கொள்வதுண்டு.

---

## சித்திர வேலேக் காக்ஷி.

லண்டனில் 1928-ம் ஞு ஏப்பிரல், மே, ஜூன் மாதங்களில் சித்திர வேலே காக்ஷி நடைபெறப் போகிற தென இந்தியா ஹை கமிஷனரிடமிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளின் குறிப்பிட்ட வேலேப் பாடுகளே இங்கிலாந்து சித்திர ரக்ஷகர்களிடம் காட்டிக் கொள்வதே இதன் முக்கிய நோக்கமாகும்.

இந்தியாவினின்றும் இக்காக்ஷிக்குறியன 16 தேர்ந்தனுப்பி வைக்க ஸர். ஜான்மார்ஷல் கே. டி., ஸி. ஐ. இ. அவர்கள் தலேமையின் கீழ் ஓர் கமிட்டி நியமனமாகியிருக்கிறது. இதில் கலந்து தம் வேலேத் திறமையைக் காட்ட விரும்புவோர்கள் டிசம்பர் மீ 10-௳க்குள்ளாக ஸெக்ரட்டேரி, லாடிப்பார்ட்மெண்ட், போர்ட்ஸெயின்ட் ஜார்ஜ், மெட்ராஸ் என்ற விலாசத்திற் கெழுதிக் கொள்வார்களாகவும் என ஷை விலாசத்தாரே தெரிவித்துக் கொள்கிருர்.

---

## இனம்! இனம்!!

படுக்கை யறையை அலங்கரிக்கும் பிரெஞ்சு லேடிகளின் அழகிய பெட்ரூம் போட்டோ படங்கள் 50 எங்களுடைய உயர்ந்த 14 கே. டி. பௌன்டன் பேனு வாங்குவோர் ஒவ்வொருவருக்கும் இனம் கொடுக்கப்படும். உடனே ஆர்டர் செய்யுங்கள். விலே ரூபாய் 2—8—0. விலாசம்:—

மில்லர் வாச் கம்பேனி,
24-வது பீட்,
ஜியார்ஜ் டவுன், மதறாஸ்.